

OFFICE OF THE STATE EDITOR
50/Gu/74
30 MAY 1974
30/5/74
GAZETTEER UNIT, MADRAS-8

86

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



# திருக்கோயில்




மாலை 16 | ஆனந்த—வைகாசி | மே—1974 | மணி 8

## பொருளடக்கம்

1. சைவமுதல் திருத்தொண்டர்
2. அற நிலையச் சட்ட நிர்வாகம்
3. வரவேற்புச் சிறப்புரை
4. காரைக்குடி கம்பன் விழாவில்
5. தியானமே தேவை
6. மூவகை அடியவர்
7. ஓங்காரம்
8. போகம் ஈன்ற புண்ணியன்
9. சிவபிரானின் வீரச் செயல்கள்
10. மாயையின் இலக்கணம்
11. திருநாவுக்கரசரின் திருத்தொண்டு
12. நல்லார் வணங்கப்படுவான்.

### சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும். தனிப் பிரதி விலை ரூபா ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல் இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

# "சைவமுதல் திருத்தொண்டர்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

158592

**முன்னுரை :**

''சைவமுதல் திருத்தொண்டர்'' என்பது, பெரியபுராணத்தில் (171) வரும் சிறந்த தொடர்களில் ஒன்ருகும். சிவபெருமானுக்கு எத்தனையோ தொண்டர்கள் பலர், எண்ணிலர் உள்ளனர். ''ஒருதோழம் தொண்டருளன்'' எனத் திருவாசகம் சிவபெருமானைப் புகழ்ந்து ஓதுகின்றது. 'தோழம்' என்னும் சொல் எத்தனையோ பலகோடிகள் அடங்கிய ஒரு பேரெண் ஆகும். ''உண்ணற்கரிய நஞ்சையுண்டு ஒருதோழம் தேவர், விண்ணிற்பொலிய அமுதம் அளித்த விடைசேர் கொடியண்ணல்'' என்பது, திருஞானசம்பந்தர் தேவாரம். இங்ஙனம் எத்தனையோ பல தொண்டர்கள் சிவபெருமானுக்கு உண்டு எனினும், அவர்களிலெல்லாம் தலையாய முதற்பெரும் தொண்டராக விளங்குபவர், சைவ சமய ஆசிரியர்கள் நால்வரில் ஒருவராகிய நம்பியாரூரர் என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகளே யாவர் என்பது, சேக்கிழார் பெருந்தகையின் திருவுள்ளக் கருத்தாகும். அதனலேயே 'சைவமுதல் திருத்தொண்டர்' எனப் பெரியபுராணத்தில் சேக்கிழார் அடிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் புகழ்ந்து போற்றிப் பாராட்டியிருக்கின்ருர்.

**வாழ்க்கைக் குறிப்புகள் :**

திருமுனைப்பாடி நாடு என்னும் நடு நாட்டில், திருநாவலூர் என்னும் தலத்தில் மறையவர் குலத்தில், சடையனுர் என்னும் தந்தையாருக்கும், இசைஞானியார் என்னும் தாயாருக்கும் மைந்தராகத் தோன்றியருளியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

''மனங்கரைத்து மலம்கெடுக்கும்
வாசகத்தின் மாண்டோர்கள்,
கனம்சடைஎன்று உருவேற்றிக்
கண்மூடிக் கதறுவரே?''

எனப் பேராசிரியர் மனேன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்கள் பாடுதல் போல, வேதம் ஓதுதலில் கனம்-சடை-கிரமம் என முறைகள் பல உண்டு. இவைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் முறையே கனபாடிகள், சடாவல்லபர், கிரமவித்தர் என்னும் பெயர்களைப் பெறுவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தந்தையார் சடை என்னும் வேதம் ஓதும் முறையில் தேர்ச்சி பெற்றவராக விளங்கியிருந்ததனுல் 'சடையனுர்' எனப் பெயர் பெற்றிருந்தார் போலும்! பெண்களுக்கு இருத்தற்குரிய இனிய பண்புநலன்களில், இசைஞானம் என்பது இன்றியமையாத தொன்ருகும். நம் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அன்னையார், மிகச் சிறந்த இசைஞானம் பெற்றவராகத் திகழ்ந்திருந்ததனுல், 'இசைஞானியார்' என்னும் பெயர் அவருக்கு அமைந்திருத்தல் கூடும்!

**நம்பியாரூரர் :**

இத்தகைய சடையனுரும், இசைஞானியாரும், அரும்பெரும் தவங்கள் செய்து பெற்றெடுத்த தம் புதல்வருக்குத் தம்முடைய குலதெய்வமாகிய திருவாரூர்ப் பெருமானின் பெயரையே பெயராகவைத்துவணங்கி மகிழ்ந்தனர்.

---

காஞ்சிபுரம் திருவேகம்பநாதர் கோயிற் பங்குனியுத்தரப் பெருவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (3—4—74).

—ஆசிரியர்

ஜ2ள 811, N58

''சீர்ஊரும் திருவாரூர்ச் சிவன்பேர்
சென்னியில் வைத்த ஆரூரன்''

என்வரும் தேவாரப் பாடல் இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும். நம்பியாரூரன் என்பதில், நம்பி என்பது முப்போதும் சிவபெருமானின் திருமேனியைத் தீண்டி வழிபடும் பேறு பெற்ற சிவாசாரியப் பெருமக்களுக்குரிய குலப் பெயராகும். 'நம்பியாண்டார் நம்பிகள்' என்னும் பெயர், இம்முறையில் அமைந்த பெயரேயாகும் என்பது, இங்கு நாம் அறிதற்குரியது.

**சுந்தரமூர்த்தி :**

நம்பியாரூரர்க்குச் சுந்தரர், அல்லது சுந்தரமூர்த்தி என்னும் பெயர், அவருடைய அழகிய திருவுருவச் சிறப்பினுல் அமைந்து பெருவழக்காக வழங்குவதாயிற்று. 'கண்கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி' எனச் சுந்தரரின் திருவுருவச் சிறப்பைச் சேக்கிழார் பெருமான், புகழ்ந்து போற்றுவர். வேறு பிற அடியார்கள் எவரும், தம்முடைய பாடல்களில் குறிப்பிட்டுக் கொள்ளாத வகையில்,

(1) மலைமலைந்த தோள் ஊரன்
(2) திருமருவும் திரள் தோளன்
(3) மல்லின்மல்கு திரள்தோள் ஊரன்
(4) அல்லியந் தாமரைத்தார் ஆரூரன்

எனச் சுந்தரர் குறிப்பிட்டுக் கொள்ளுதலைக் காண்கின்றோம். இத்தகைய சிறந்தபேரழகு வாய்ந்தவராகத் திகழ்ந்திருந்ததனுலேயே, இவர் தெருவில் சிறு குழந்தையாக விளையாடிக் கொண்டிருத்தலைக் கண்ட நரசிங்க முனையர் என்னும் அரசர், இவரை அன்பினுல் மகன்மை கொண்டார். அதனுல், இவர் இளமையிலேயே மன்னவர் திருவும், தங்கள் வைதிகத் திருவும், ஆகிய இருவகைத் திருவும் பொங்க வளர்ந்து வரலாயினர். இவ் இருவகை நலன்களும் சுந்தரமூர்த்திகளின் வாழ்க்கை முழுவதிலும் மிகச் சிறப்பாகப் பொலிந்து விளங்கி வந்தன.



**கல்வி நலம் :**

சுந்தரமூர்த்தி சுவாமிகள், தம் இளமைப் பருவத்தில் கற்றற்குரிய கலைகள் பலவும் கற்றுத் தேர்ந்தார். ''கற்ற கல்வியிலும் இனியானைக் காணப் பேணு மவர்க்கு எளியானை'' எனச் சுந்தரர் பாடியிருத்தல், அவர்தம் கல்வி நலத்தின் சிறப்பினை உணர்த்துதல் காணலாம்.

''கொடுக்கிலா தானைப் பாரியே என்று
கூறினும் கொடுப்பாரிலை'' (1)

''குமண மாமலைக் குன்றுபோல் நின்று
தங்கள் கூறை ஒன்று இன்றியே'' (2)

என வரும் பாடற்பகுதிகளால் பாரி, குமணன் முதலிய பல வள்ளல்களைப் பற்றிக் கூறும் சங்க கால நூல்களைச் சுந்தரர் நன்கினிது கற்றுத் தேர்ந்திருந்தமை புலனுகின்றது. திருநெல்வாயில் அரத்துறை என்னும் தலத்தில் பாடிய திருப்பதிகத்தில்,

''அற்றூர் பிறவிக்கடல் நீந்தி ஏறி
அடியேன் உய்யப் போவதோர் சூழல்
சொல்லே'' (1)

''ஓடு புனற் கரையாம் இளமை
உறங்கி விழித்தால் ஒக்கும்இப் பிறவி'' (2)

''அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய்
அடியேன் உய்யப் போவதோர் சூழல்
சொல்லே'' (3)

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளியிருத்தல், அவர்க்குத் திருக்குறளில் இருந்த அளப்பரிய ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றது. திருக்குறளைப் பயின்றதனுற் சுந்தரரும், சுந்தரரால் பயிலப்பட்டதனுல் திருக்குறளும் எய்திய சிறப்பினை, இப்பாடற்பகுதிகளால் நாம் உணரப் பெறுகின்றோம். 'விருந்தாய சொல்மாலை கொண்டேத்தி' எனவரும் பாடலால், சுந்தரர் தம்முடைய பாடல்களின் அமைப்பில், ''விருந்தே தானும் புதுவது கிளந்த

யாப்பின் மேற்றே'' எனவரும் தொல்காப்பிய நூற்பாவினைப் போற்றி மேற்கொண்டுள்ளமை புலனாகின்றது.

**திருமுறைப் பயிற்சி :**

இங்ஙனம் தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களைப் பயின்றிருந்ததோடன்றித் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முதலிய சைவப் பெருஞ் சான்றோர்களின் பாடல்களிலும், சுந்தரர் பெரிதும் ஈடுபட்டுத் தோய்ந்த சிந்தையராய்த் திகழ்ந்திருந்தனர். ''முன்பு எனைப் பித்தனென்றே மொழிந்தனை ஆதலாலே இன்றெனைப் பித்தனென்றே பாடுக'' என்று இறைவன் அருளிய போது, சுந்தரர் 'பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா!' என்று தொடங்கிப் பாடியதற்கு அடிப்படை,

''விண்ணோர் பெருமானே
விகிர்தா விடையூர்தி
பெண்ணாண் அலியாகும்
பித்தா பிறைசூடி''

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடற் பகுதியேயாகும் எனச் சான்றோர்கள் கருதுவர். ''எந்தைதான் எனை ஏன்று கொளுங் கொலோ?'' எனத் தம் திருவாரூர்ப் பதிகத்தில் ஞானசம்பந்தர் அருளியதனை நினைவுகூர்ந்தே, சுந்தரர் ''எந்தை இருப்பதும் ஆரூர், அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்'' எனப் பாடியருள்வாராயினர். இவ்வாறே ''இணைகொள் ஏழு எழுநூறு இரும் பனுவல் ஈன்றவன் திருநாவினுக்கு அரையன்'' எனத் தொகை குறித்துப் பாடியிருத்தலின், சுந்தரர் திருநாவுக்கரசரின் தேவாரத் திருப்பாடல்களையெல்லாமும், பெரிதும் அன்புடன் போற்றிப் பயின்றிருந்தமை புலனாகின்றது.

**தமிழ்ப்பற்று :**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவப்பற்று மட்டுமே உடையவரல்லர்; மிகச் சிறந்த தமிழ்ப்பற்றும் கொண்டிருந்தார் என்பது, ''பண்ணிடைத் தமிழ் ஒப்பாய், பழத்தினிற் சுவைஒப்பாய், கண்ணிடை மணி ஒப்பாய், கடுவிருட் சுடரொப்பாய்'' எனவும், ''கண்ணாய் ஏழுலகும் கருத்தாய அருத்தமுமாய்ப், பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே'' எனவும், பாடுவனவற்றால் அறியப்பெறுகின்றது. ''செந்தமிழ்த் திறம் வல்லிரோ? செங்கண் அரவம் முன்கையில் ஆடவே வந்து நிற்கும் இது என்கொலோ?'' எனவரும் பாடல்வரி, கொடிய பாம்புகளின் நஞ்சினைத் தீர்க்கவல்ல மந்திர ஆற்றல் செந்தமிழ் மொழிக்கு உண்டு என்று, சுந்தரர் தெளிந்திருந்ததனை நமக்கு அறிவிக்கின்றது. இவ்வாறு தமிழ்மொழிப் பற்று மிக்கவராய், தமக்குமுன் விளங்கியிருந்த தமிழ்ப் பெருஞ் சான்றோர்களின் நூல்களையெல்லாம் போற்றி மகிழ்ந்து வந்த சுந்தரர், ''மன்னு புலவன் வயல் நாவலர்கோன், செஞ்சொல் வன்தொண்டன்'' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டதில் வியப்பொன்றுமில்லை.

இங்ஙனம், கற்பனகற்றுத் தேர்ந்து, கட்டிளம் காளைப் பருவம் எய்திய சுந்தரர்க்குத் திருமணம் செய்விக்கக் கருதிய பெற்றோர்கள், சடங்கவி சிவாசாரியர் என்பவருடைய திருமகளாரை, மணம் செய்விக்க முற்பட்டனர். சிக்கை, கற்பம், வியாகரணம், நிருக்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்பன, நான்கு வேதத்திற்குரிய ஆறு அங்கங்கள் எனக் கூறப்படும். இவற்றை வடமொழியில் 'ஷடங்கம்' (ஷட்+அங்கம்) என்பர். இந்த ஆறு அங்கங்களையும் கற்றுத் தேர்ச்சி பெற்றவர்கள் 'ஷடங்கவித்' எனப்படுவர். 'ஷடங்கவித்' என்பதே, தமிழிற் 'சடங்கவி' என மருவி வழங்குவதாயிற்று என்பது, ஈண்டு நாம் அறிதற்குரியது. சிவபெருமான் ஒரு கிழவேதியராக வந்து, சுந்தரருடன் வல்வழக்கிட்டு அற்புதப் பழ ஆவணம் காட்டி, அவரைத் தம் மீளா ஆளாகவும், அரும்பெருந் தோழராகவும் கொண்டமை முதலிய வரலாறுகள், யாவரும் நன்கறிந்தவை.

### (1) வைதாலும் வாழ்வு:

சைவமுதல் திருத்தொண்டராகிய சுந்தரரின் வாழ்க்கையில், நாம் பல புதுமையான, புரட்சியான நிகழ்ச்சிகளைக் காணுகின்றோம். சமய உலகிற் கடவுளைப் புகழ்ந்து பணிந்து துதித்து அருள்பெறுவதுதான், நீண்ட நெடுங்காலமாக இருந்து வரும் முறை. எல்லாக் காலத்திலும், எல்லா நாட்டிலும், எல்லாச் சமயங்களிலும், இம்முறையே கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் அதற்கு மாறாக ''இறைவனை இகழ்ந்து நிந்தித்தும், எள்ளலாகப் பேசியும்கூட, அன்பர்கள் இறைவனை வழிபடலாம்; இறைவனின் அருளைப் பெறலாம்; அடியவர்கள் அன்பினால் தன்னை நிந்தித்து இகழ்ந்து பேசினாலும், இறைவன் அவைகளை மிகவும் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டு அருள் புரிகின்றான்'' எனவுணர்த்தும் ஒருவகைப் புதுநெறியைச் சுந்தரரின் பாடல்களில் நாம் காணுகின்றோம். ''மகத்திற் புக்கதோர் சனி எனக்கு ஆனாய்'' எனச் சுந்தரர், இறைவனை மனம் நொந்து நிந்தித்துப் பாடியிருக்கக் காண்கின்றோம். ''ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே'' என்றும்; ''எல்லைக் காப்பதொன்று இல்லையாகில் நீர் எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானிரே?'' என்றும்; ''வாரமாகித் திருவடிக்குப் பணி செய் தொண்டர் பெறுவதென்னே? ஆரம் பாம்பு, வாழ்வது ஆரூர், ஒற்றியூரேல் உம்மதன்று, தாரமாகக் கங்கையாளைச் சடையில் வைத்த அடிகேள், உந்தம் ஊரும் காடு, உடையும் தோலே, ஓணகாந்தன் தளியுளீரே'' என்றும்; ''பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில் இவர் அலாது இல்லையோ பிரானார்?'' என்றும் பிறவாறும் வரும் சுந்தரரின் பாடற் பகுதிகள், முத்தமிழால் வைதாரையும் இறைவன் முனியாது உகந்து, இன்னருள்கள் புரிந்து வாழ்வித்தலை வலியுறுத்துதல் காணலாம்.

### (2) இறைவனைப் பணிகொள்ளல்:

உலகிலுள்ள பல்வேறு சமயங்களும், இறைவனுக்கு மனமொழி மெய்களால் பலவகைப் பணிகளும் செய்து வழிபடுவதன் வாயிலாகவே, நாம் இறையருளைப் பெற முடியும் என்று வலியுறுத்துதலைக் காண்கின்றோம். ஆனால், சுந்தரரோ, தேவர்களும் முனிவர்களும் பணிசெய்து பணிந்து வழிபடுகின்ற பரமனாகிய இறைவனையே, தமக்குப் பணிகள் பல புரியுமாறு ஏவிப் பணிகொண்டு, அருள்பெற்று இருக்கின்றார்! ''கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்; ஆளிலை எம்பெருமான் அவையட்டித் தரப் பணியே'' என்று இறைவனுக்குப் பணியிடுகின்றார் சுந்தரர். ''திருமுதுகுன்றத்தில் மணிமுத்தாற்றில் இட்ட பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் கிடைக்கும்படி செய்ய வேண்டும்; அன்று எனை நீர் வலிந்து ஆட்கொண்ட அருள் இதில் அறிவேன்'' என்று, சுந்தரர் இறைவனை எச்சரிக்கின்றார்.

திருவொற்றியூர்ப் பெருமான்பால் சென்று, ''மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும்அன்றி, மணிநீள் முடியின்கண் கங்கைதன்னைக் கரந்தருளும் காதல் உடையீர்! அடியேனுக்கு இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்து, என் உள்ளத் தொடையவிழ்த்த திங்கள் வதனச் சங்கிலியைத் தந்து என் வருத்தம் தீரும்?'' என்று வற்புறுத்துகின்றார். இம்மட்டோ! தாம் சங்கிலியார்க்குச் சபதம் செய்து கொடுக்க வரும்போது, திருவொற்றியூர்ப் பெருமான் கோயிற் கருவறையில் இல்லாமல் நீங்கி, மகிழ மரத்தடியிற் சென்று தங்கியிருத்தல் வேண்டும் எனவும், சுந்தரர் கட்டளையிடுகின்றார். திருவாரூரில் தம்பக்கல் பரவையார் கொண்ட ஊடலை நீக்குவதற்காக, அங்குள்ள தியாகராசப் பெருமானை ''இவ்விரவே நீர்போய்ப் பரவையுறு புலவி தீர்த்துத்தாரும்; இங்கு நில்லாது நீர் விரைவின் எழுந்தருளிப்

புலவியினை நீக்கும்'' என்றெல்லாம் ஏவிப் பணி கொள்ளுகின்றார். அவி நாசிப் பதியில் முதலையுண்ட மதலையை வருவித்தற் பொருட்டு, இறைவனை விளித்துப் ''புரைக்காடு சோலைப் புக் கொளியூர் அவிநாசியே, கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே'' என்று கட்டளையிடுகின் றார். இங்ஙனம் பணி செய்து பரவி வழிபடுதற்குரிய இறைவனையே, பல வகைப் பணிகள் செய்ய ஏவிப் பணி கொண்டருளிய தனிச் சிறப்பு, சைவ முதல் திருத்தொண்டராகிய, நம் சுந்த ரர்பால் காணத் திகழ்கின்றது.

### (3) பொருளாசை:

உலகிலுள்ள சமயங்கள் அனைத்துமே இறையருளைப் பெற விரும்புபவர் களுக்குப் பொருளாசை சிறிதும் இருத் தல் கூடாது என, மிகவும் வலியுறுத்தி அறிவுறுத்துகின்றன. 'காதற்ற ஊசி யும் வாராது காண் நம் கடைவழிக்கே'' என்று, பட்டினத்தார் போன்ற சான் றோர்கள் பலரும், பொன்னையும் பொருளையும் இகழ்ந்து அறவே துறந் துள்ளனர். ஆனால் நம் சுந்தரரோ அங்ஙனமெல்லாம் செய்திலர். தமக்கு வேண்டும்போதெல்லாம் பொன்னும் பொருளும் கொடுக்கும்படி, இறைவனை அவ்வப்போது வற்புறுத்திக் கேட்டுப் பெற்று மகிழ்ந்து வந்தார். திருவா ரூரில் நிகழும் பங்குனி உத்திரவிழாச் செலவுக்காகத் திருப்புகலூரில் செங் கற்களே பொன்கட்டிகளாக இறையரு ளால் மாறப் பெற்றார். திருமுதுகுன் றத்தில், பன்னீராயிரம் பொன்வேண்டி இறைவனால் கொடுக்கப் பெற்றார். காஞ்சிபுரத்தில் திருவோணகாந்தன்தளி என்னும் கோயிலில் ''கையில் ஒன்றும் காணம் இல்லை'' எனப்பாடி, எண்ணில் நிதி பெற்றார். திருவீழிமிழலையில் ''இருந்து நீர் தமிழோடு இசை கேட் கும் இச்சையாற் காசுநித்தல் நல்கினீர்; அருந்தண் வீழி கொண்டீர் அடியேற் கும் அருளுதிரே'' எனப் பாடி வேண்டு மளவு பொருள் பெற்றார். இறை யருளைப் பெறச் சுந்தரர்க்குப் பொருள் விருப்பம் சிறிதும் தடையாக அமைந் திலது.

### (4) பெண்ணாசை:

இங்ஙனமே உலகிலுள்ள சமயங்கள் அனைத்தும், இறையருளைப் பெற விரும் புபவர்கள் அனைவரும், பெண்ணாசையை அறவே விடுத்துத் துறந்தொழித்தல் வேண்டும் எனப் பெரிதும் வலியுறுத் திக் கூறுகின்றன. பெரும்பாலான அரு ளாளர்களும் ஞானிகளும், பெண்ணை யும் பெண்ணாசையையும் பலவகை களில் கடிந்தும் இகழ்ந்தும் நிரம்பப் பாடியுள்ளனர். 'பெண்ணெனும் மாயப் பிசாசு' 'பெண்பேய்' 'பெண்ணெனும் பொல்லாக் கொடுங்கூற்று' எனப் பல வகைகளில் ஞானிகளும் அருளாளர் களும் பெண்களை இகழ்ந்து பேசியிருப் பதையே, பெரும்பாலும் காண்கின் றோம். ஆனால் நம் சுந்தரரோ அங்ங னம் செய்திலர். 'பண்மயத்தமொழிப் பரவை' 'மாழை ஒண்கண் பரவை' 'மான்திகழும் சங்கிலி' 'திங்கள் வதனச் சங்கிலி' என்றெல்லாம், சுந்தரர் தம் காதல் மனைவியரைப் புகழ்ந்து போற்றி மகிழ்ந்து இன்புறக் காண்கின்றோம்.

''பண்டுநிகழ் பான்மையினாற்
  பசுபதிதன் அருளாலே
வண்டமர்பூங் குழலாரை
  மணம் புணர்ந்த வன்தொண்டர்,
புண்டரிகத் தவள்வனப்பைப்
  புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்று
  அமர்ந்திருந்தார் காதலினால்''

''தென்நாவ லூர்மன்னன்
  தேவர்பிரான் திருவருளால்
மின்னாரும் கொடிமருங்குற்
  பாவைஎனும் மெல்லியல்தன்
பொன்னாரும் முலைஒங்கற்
  புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோக
  பரம்பரையின் விரும்பினார்''

எனச் சேக்கிழார் பெருமான் பாடியருளியிருத்தல் போல, பெண்ணின்பத்தைப் பேரின்பமாக நுகர்ந்து மகிழ்ந்த தனிப்பெருஞ் சிறப்பு, நம் சுந்தரர்க்கே யுரியதாகும்.

**(5) தவநெறி:**

திருவெண்ணெய்நல்லூரில் அருட்டுறை என்னும் கோயிலில், இறைவனால் தடுத்தாளப்பெற்ற சுந்தரர், அடுத்து முதன் முதலாகச் சென்று வழிபட்ட திருத்துறையூர் என்னும் சிவத்தலத்தில், ''அவநெறியிற் செல்லாமே எனைத் தடுத்தாண்டாய், அடியேற்குத் தவ நெறி தந்தருள்'' என்று திருப்பதிகம் பாடி, இறைவனை வேண்டிக் கொண்டார். அங்ஙனம் இறைவனை வேண்டித் தவநெறி பெற்ற சுந்தரர், பரவையாரையும் சங்கிலியாரையும் மணந்து கொண்டு, இல்லற வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தார். இதனால் உலகுக்கே ஒரு பெரும் புரட்சியையும் புதுமையையும் நிகழ்த்திக் காட்டியவர், சைவமுதல் திருத்தொண்டராகிய நம் சுந்தரர் பெருமானே எனலாம். நாடுகளிற் புக்குழன்றும், காடுகளிற் சரித்தும், நாகமுழை புக்கிருந்தும், தாக முதல் தவிர்ந்தும், நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும், பிறவாறு வாழ்ந்தும் வருவதுதான் தவநெறி என்று, பலரும் கருதி வருகின்றனர். ஆனால் அக்கருத்தினை மாற்றி,

''காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

என்று, ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிச் செய்த, பழந்தமிழ்ச் சான்றோர்களின் தவநெறி வாழ்க்கையின் இயல்பு இது என்று உலகுக்கு உணர்த்தியருளியவர், நம் செந்தமிழ்ச் சுந்தரரே எனத் துணிந்து கூறலாம்.

**(6) தலைசிறந்த கலைஞர், சுவைஞர்:**

இறையருளைப் பெறுவதற்கு விரும்பும் அடியவர்களிற் பெரும்பாலோர், உலகை வெறுப்பர்; உலகப் பொருள்களை வெறுப்பர்; உலக போகங்களை வெறுப்பர்; உடலைப் போற்றுமல், ஊனுடைகளைப் பொருட்படுத்தாமற் புறக்கணிப்பர். கடுமையான நோன்புகளை மேற்கொண்டு, உடலைப் பட்டினியால் வருத்தி ஒறுத்துக் கொள்ளுதல், பொதுவாகப் பக்தர்கள் மாட்டும், ஞானிகள் மாட்டும் யாண்டும் காணப்படுகின்றது. உடம்பின் இழிதகவு நிலையாமை முதலியவைகளைப் பற்றி, ஞானிகள் பலர் ஏராளமாகப் பாடியுள்ளனர். 'பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை' என்பது ஞானிகள் கருத்து.

இவ்வியல்பிற்கெல்லாம் முற்றிலும் மாறுபட்டவர் நம் சுந்தரர்! சுந்தரர் ஒரு பெருங் கலைஞர்; சிறந்த சுவைஞர் (ரசிகர்), எதிலும் அழகியலைப் போற்றும் அறிஞர்! நல்லுணவுகளை உண்ணவும், நல்லுடைகளை அணியவும், நற்பொருள்களை நுகரவும், நல்ல பெருமித இன்ப வாழ்வு வாழவும், வல்லவர் அப்பெருந்தகையார்! கலையியல் நுகர்ச்சிகளில் தலைசிறந்து திகழ்ந்திருந்த தனிப்பெரு மாட்சிமைக்கு உரியவர் சுந்தரர்! ''முத்தாரம் இலங்கிமிளிர் மணி வயிரக் கோவை அவை பூணத் தந்தருளி, மெய்க்கினிதா நாறும் கத்தூரி கமழ் சாந்து பணித்தருள வேண்டும் கடல் நாகைக் காரோணம் மேவி யிருந்தீரே'' என்றும், ''பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சரிகை மேலோர் பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும், கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே'' என்றும், சுந்தரர் திருநாகைக் காரோணப் பெருமானை வேண்டிப் பாடியருளியிருத்தல், நம் சிந்தனைக்குரிய விருந்தாகும்.

### (7) மனித நலப் பண்பாளர்:

ஞானிகளும் சமயச்சான்றோர்களும், பெரும்பாலும் பற்றற்றே இருப்பர். அவர்களின் வாழ்க்கை, தாமரை இலை யில் தண்ணீர்போல் இருக்கும். புளியம் பழமானது ஓட்டுக்குள் இருந்தும், அத னுடன் ஒட்டாமல் தனித்திருக்கும். அதுபோலவே ஞானிகளும் உலகில் இருந்தாலும், உலகில் ஒட்டிக்கொண்டு விடாமல் தனித்திருப்பர். ''அளிபுண் ணகத்துப் புறந்தோல்மூடி அடியே னுடை யாக்கை புளியம் பழம் ஒத்தி ருந்தேன்'' என்பது திருவாசகம். ஞானி கள் உற்றார் உறவினர் நண்பர் என்ற பற்றுக்களைக் கொள்வதில்லை. ''இணை யார் திருவடிஎன் தலை மேல் வைத்த லுமே துணையான சுற்றங்கள் அத்தனை யும் துறந்தொழிந்தேன்'' என்பர் மணி வாசகர். அருளாளர்கள் தம்முடைய தாய் தந்தை முதலியவர்களை ஒரோ வழி அன்புடன் போற்றியிருப்பராயினும், தம்முடைய பாடல்களில் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை. இதற்கு மாருக நம் சுந்தரர் தம்முடைய தாயை யும் தந்தையையும் பலகால் நினைவு கூர்ந்து ''சடையன் சிறுவன் இசை ஞானி காதலன் (மகன்)'' எனப் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கக் காண் கின்ருேம். இவ்வியல்பு, ஞானசம்பந் தர் நாவுக்கரசர் மணிவாசகர் பாடல் களில் யாண்டும் காணப்படவில்லை. தம்மை அன்பினுல் மகன்மை கொண்டு வளர்த்த நரசிங்க முனையர் என்பவ ரையும், சுந்தரர் மறவாது நினைத்துப் போற்றுகின்ருர். தாம் தோன்றிய திருநாவலூர்த் தலத்திலும் அவருக்கு மிக்க ஈடுபாடு இருந்தது. தம்மை 'நாவலர்கோன்' என்று பல பதிகங் களில் குறிப்பிட்டுக் கொள்வதுடன், ''நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரையன் ஆதரித்து ஈசனுக்கு ஆட்செய்யும்ஊர் அணிநாவலூர்'' என்று சுந்தரர் பாடியிருப்பது, அவர் தம் சிறந்த இனிய மனித நலப் பண்பை நனிமிக இனிது உணர்த்துகின்றது.

### (8) நண்பிற்கினிய பண்பினர்:

சமயச் சான்றோர்களும் ஞானிகளும், தம் சிறந்துயர்ந்த தெய்விகப் புனிதப் பண்புநலங்களால், ஏனைய மனிதர் எல் லோரையும்விட உயர்ந்தோங்கித் திகழ்ந்தொளிர்தலின், அவர்களை வழி படும் அன்பர்கள் இருப்பரேயன்றி, மற்று அவர்களுடன் சமமாகக் கலந்து பழகும் நண்பர்கள் இருக்க வாய்ப்பு நேர்வதில்லை. ஆனுல் நம் சுந்தரர் பெருந்தகையோ, நண்பர்கள் பலரைப் பெற்றிருந்தார். சேரமான்பெருமாள், சோமாசிமாறர், கோட்புலியார் ஆகிய வர்களிடம், சுந்தரர் கெழுதகைமை நட்புரிமை பூண்டு பழகிய திறங்கள், பெரிதும் வியந்து போற்றற்பாலன. தம்மை வெறுத்துப் புறக்கணித்த விறல்மிண்டர், ஏயர்கோன்கலிக்காமர் என்பவர்களையும், சுந்தரர் தம் அன்பி னுலும் பண்பினுலும் சிறந்த நண்பர் கள் ஆக்கிக் கொண்டு மகிழ்ந்தார், ''பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் தங் கிற்று உலகு'' என்னும் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக, நம் சுந்தரர் திகழ் கின்ருர். பெருமிழலைக் குறும்பர் என்ப வர், சுந்தரர்பால் கொண்டிருந்த அன் பும் ஈடுபாடும் அளப்பரியன. நாளும் நம்பியாரூரர் என்னும் நாமம் நவின்றே பெருமிழலைக் குறும்பர் அணிமாதி சித்திகள் எல்லாம் அடையப்பெற்ருர். கோட்புலியார்பால் தாம் கொண்ட நட்புரிமையினுல், அவர்தம் புதல்வியர் ஆகிய வனப்பகை, சிங்கடி என்னும் இருவரையும், சுந்தரர் தம்முடைய அன் பிற்கினிய புதல்வியராக ஏற்றுப்போற்றி மகிழ்ந்தார். தம்முடைய பாடல்களில் 'வனப்பகை சிங்கடியப்பன்' என்று தம்மைச் சுட்டிக் கொண்டு, பெரு மகிழ்வு எய்தினுர். தம்முடைய நண்ப ராகிய சோமாசிமாறர் விரும்பியபடி, அவர் செய்த வேள்விக்குத் திருவாரூர்த் தியாகராசப் பெருமானை எழுந்தருளும் படிச் செய்து உதவினுர். இன்னேரன்ன செய்திகள் பலவும், சுந்தரர் நண்பிற்கினிய பண்பினராதலைத் தெள்ளிதின் உணர்த்தும்.

**(9) பரந்த மனப்பான்மை:**

சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'சைவ முதல் திருத்தொண்டர்' எனச் சேக்கிழார் பெருந்தகையால் பாராட்டப் பெற்றமைக்குச், சுந்தரர் பாடியருளிய திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகச்சிறப்பே காரணமாகும். சுந்தரர் சாதி சமய வேறுபாடுகள் எதுவும் கருதாதவர். சாதி உயர்வு தாழ்வுகள் யாவும், அறவே ஒழிதல் வேண்டும் என விரும்பியே, அவர் பல்வேறு சாதியினராகிய அடியவர்கள் அனைவரையும், சமமாக வைத்துப் போற்றிப்புகழ்ந்து பாடினார். பௌத்த சமயத்தைச் சேர்ந்த சாக்கிய நாயனாரையும்கூட, மிகவும் மதித்துப் போற்றிப் பாடியிருப்பது, சமய வேறுபாடுகள் கருதாத பரந்த மனப்பான்மை வாய்ந்தவர், சுந்தரர் என்பதை உணர்த்துகின்றது. சாதி சமயம் நாடு மொழி காலம் இடம் கொள்கை ஒழுக்கம் நெறி இனம் முதலிய எத்தகைய வேறுபாடுகளும் கருதாமல், நல்லவர்கள் எங்கிருந்தாலும், எக்காலத்தில் இருந்தாலும், அவர்கள் அனைவருமே போற்றி வழிபடத்தக்கவர்கள் ஆவர் என்பது, சுந்தரமூர்த்திகள் துணிந்த முடிவான சிறந்த கொள்கை. அதனாலேயே அவர் ''அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்'' என அருளிச் செய்வாராயினர்.

''மூவேந்தர் தமிழ்வழங்கும்
நாட்டிற்கு அப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த
முறைமை யோரும்,
நாவேய்ந்த திருத்தொண்டத்
தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து
முன்னும் பின்னும்,
சேவேந்து வெல்கொடியான்
அடிச்சார்ந் தாரும்,
செப்பியஅப் பாலும்அடிச்
சார்ந்தார் தாமே''

எனச் சேக்கிழார் பெருமான், அவ்வரிக்குச் செய்துள்ள விளக்க விரிவுரை, சுந்தரரின் சிறந்த மனப்பான்மையை மட்டுமேயன்றி, இந்நாளைய முற்போக்குச் சீர்திருத்தப் புதுமைப்புரட்சியுணர்வினையும், புலப்படுத்திக்கொண்டு திகழ்தல் காணலாம்.

**(10) தன்நிகர் உயர்ச்சி இல்லார்:**

இத்தகைய பற்பல சிறந்துயர்ந்த பண்புநலங்களால், சுந்தரர் ஒப்பும் உயர்வும் அற்றவராக விளங்கினர். ''தன் நிகர் உயர்ச்சி இல்லான்தான், காப்பியத் தலைவனாவான்'' என்பது, கவிஞர் பெருமக்கள் கண்ட துணிபு. சுந்தரர் எல்லா வகைகளாலும் முழு நிறைவு வாய்க்கப்பெற்றவர்! நம்பியாரூரர் என்னும் பெயரில் உள்ள நம்பி என்னும் சொல், முழு நிறைவைக் குறிக்கும். கச்சிநம்பி வடுகநம்பி என்னும் பெயர்களை, வடமொழிவாணர் முறையே காஞ்சிபூர்ணர் ஆந்த்ரபூர்ணர் எனக் கூறுவர். ஆதலின் நம்பி என்னும் சொல், பூர்ணர் என்னும் பொருளை உணர்த்துதல் தெளியலாம். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும், தம் வாழ்க்கையில் எய்தப் பெற்றவர்களே, முழு நிறைவு பெற்றவராவர். பெரும்பாலான சமயச்சான்றோர்களின் வாழ்வில், அறமும் வீடுபேறும் மட்டுமே அமைந்திருக்கும். மிகப் பெரும்பாலான சமயச் சான்றோர்கள், தம்வாழ்வில் பொருளும் இன்பமும் பெறுவதோ தேடுவதோ இல்லை. சுந்தரர் இல்லறவாழ்வு மேற்கொண்டவர். சேரமான் பெருமாள் முதலியோர்க்கு விருந்தோம்பல் முதலிய அறங்களைச் செய்தவர். இறைவனைப் பாடிப் பலகால் நிரம்பப் பொருள் பெற்றவர். 'பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக முற்ற நுகர்ந்தவர்'. வெள்ளானையின் மீது திருக்கயிலாயம் சென்று வீடுபேறு எய்தியவர். ஆதலின், அறம் பொருள் இன்பம் வீடுபேறு என்னும் நான்கையும் ஒருசேரப் பெற்று, முழுநிறைவான வாழ்க்கை வாழ்ந்து, உலகுக்கே ஒரு பெரும் வழிகாட்டியாகத் திகழ்ந்த பெருமை, சுந்தரர்க்கே உண்டு. அதனாலேயே தமிழகத்தின் தனிப்பெருந் தெய்விகக் காப்

பியமாகிய பெரியபுராணத்திற்குரிய காப்பியத் தலைவராகச், சுந்தரரே அமைந்து சிறந்து விளங்குகின்றார். பெரியபுராணத்தின் முதல் இடை முடிவு என்னும் எல்லாப் பகுதிகளிலும், சுந்தரரின் வரலாறு தொடர்புற அமைக்கப்பட்டிருத்தல் உன்னியுணர்தற்குரியது.

### (11) வீடுபேற்றில் வியப்பு:

அறுபான்மும்மை நாயன்மார்களும், மற்றும் அளவிடற்கியலாத எத்தனையோ பல அருளாளர்களும், வீடுபேறு அடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் தமது உடலை இவ்வுலகிற் கழித்து அகற்றி விட்டே, இறையருளிற் கலந்துள்ளனர். அருளாளர்களில் எவருமே, தாம் இந்நிலவுலகில் வாழ்ந்திருந்தபோது பெற்றிருந்த உடலுடன் கயிலாயம் சென்றதாக வரலாறு இல்லை. ஆனால் சுந்தரர் ஒருவர்மட்டும், அங்ஙனமின்றித் தம் உடலுடனேயே திருக்கயிலாயம் சென்று இறையருள் பெற்ருர். தாம் மட்டுமேயன்றித் தம் நண்பராகிய சேரமான் பெருமாள் நாயனுர்க்கும், அத்தகைய சிறந்த பேறு கிடைக்கும்படி செய்தருளினுர். ''களையா உடலோடு சேரமான் ஆரூரன் விளையா மதம்மாரு வெள்ளானை மேற்கொள்ள ...'' என்று திருவிசைப்பாவிலும்; ''ஞான ஆரூரரைச் சேரரை அல்லது நாம் அறியோம் மானவ யாக்கையொடும் புக்கவரை...'' எனத் திருத்தொண்டர் திருவந்தாதியிலும், இவ்வுண்மை வலியுறுத்தப் பெற்றிருத்தலைக் காண்கின்ருேம். தமது திருவஞ்சைக்களத்துத் திருப்பதிகம், சேரமான் பெருமாளின் திருக்கயிலாய ஞானவுலா, என்னும் தமிழ்ப்பாடலையும், நூலையும் திருக்கயிலைக்கு எடுத்துச் சென்று, அரங்கேற்றம் செய்து, மீளவும் அவற்றைத் தமிழகத்திற்கே அனுப்பி வைத்தருளிய பெருமையும், நம் சுந்தரர்க்கே உரியது. சுந்தரர் 'சைவமுதல் திருத்தொண்டர்' என்பதற்கு இஃதும் ஒரு காரணமாகும்.

### (12) சைவப் பயிர:

தமிழகமாகிய வயலில், சைவம் என்னும் பயிர், நீண்ட நெடுங்காலமாகத் தழைத்து ஓங்கி வளர்ந்து வருகின்றது. ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும், தமிழக வயலிற் பக்தி என்னும் விதையை விதைத்து, அன்புநீர் பாய்ச்சிச் சைவப் பயிர் முளைத்தெழுமாறு செய்து போந்தனர். ஆயினும், அதனை மேன்மேல் வளர்த்துத் தழைத்தோங்கச் செய்த பெருமை, சுந்தரர்க்கே யுரியதாகும். அப்பரும் சம்பந்தரும் போன்ற அருளாளர்கள், சிவபிரானையே பெரிதும் புகழ்ந்து பாடிச் சென்றனர். சிவபெருமானை மட்டுமேயன்றிச் சிவனடியார்களையும் பெரிதும் போற்றித் திருத்தொண்டத் தொகை பாடியருளிய சிறப்பும் பெருமையும், சுந்தரர்க்கே உரியனவாகும். சுந்தரர், திருத்தொண்டத் தொகையைப் பாடிற்றிலராயின், நம்பியாண்டார்நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியும், சேக்கிழார்பெருமானின் திருத்தொண்டர் புராணமும், தோன்றியிருத்தல் இயலாது. தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான கோயில்களும், வழிபாடுகளும், விழாக்களும், அவற்றைத் தழுவிய பல்வேறு கலைஒழுக்கப் பண்பாட்டு நலங்களும், வாழ்க்கை நெறிமுறைகளும், வாழ்வியல் வளங்களும், ஒரு சிறிதும் ஏற்பட்டிருக்கமாட்டா. இது குறித்தே,

''படியில் நீடும் பத்திமுதல்,
அன்பு நீரிற் பணைத்தோங்கி,
வடிவு நம்பி ஆரூரர்
செம்பொன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின்
களைகட் டெழுந்து கதிர்பரப்பி,
முடிவி லாத சிவபோகம்
முறுகி முதிர்ந்து விளைந்ததால்''

எனத் தெய்வக்கவிஞர் சேக்கிழார் பெருமான், சுந்தரரைப் பெரிதும் புகழ்ந்து போற்றியுள்ளார். இங்ஙனம் எல்லையற்ற பல்வகைப் பெருநலன்களை விளைவிப்பதற்குக் காரணமாகத் திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகம்

பாடி, நம் தமிழ்நாட்டிற்கு அளப்பரும் நலங்களை விளைவித்த, அரும்பெரும் சான்றோர் சுந்தரர் என்பது, நாம் பெரிதும் உணர்ந்து மகிழ்தற்குரியது.

**முடிவுரை :**

சைவசமயம் நம் தமிழகத்துக்கு உரிய பழம்பெரும் சமயம். 'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' என்பது, பேராசிரியர் மறைமலையடிகளாரின் ஆராய்ச்சி முடிவு. இன்றைய உலகில் எத்தனையோ பல சமயங்கள் இருந்து வருகின்றனவாயினும், அவைகளில் எல்லாம் மிகவும் தொன்மை வாய்ந்தது சைவசமயமேயாகும். எத்தனையோ பல பழம்பெரும் சமயங்கள் இந்நாளில் இல்லாமல் மறைந்தொழிந்து போயின. அங்ஙனமில்லாமல் சுண்ணும்புக் கற்காலம் முதல், ஏறத்தாழ இருபதாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இன்றளவும் நின்று நிலைபெற்று, உயிர்ப்பாற்றல் மிக்க நிலையிற் சைவசமயம் விளங்கி வருகின்றது. இதனைச் சர். ஜான்மார்ஷல் போன்ற மேலைநாட்டு ஆராய்ச்சி அறிஞர்கள் உளமார உடன்பட்டுப் போற்றியுள்ளனர்.*

நாம் நம் தமிழ்மொழியை எங்ஙனம் விரும்பிப் போற்றி வளர்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோமோ, அங்ஙனமே நம் பழந்தமிழ்ச் சான்றோர்களும் மூதாதையர்களும் கடைப்பிடித்துப் போற்றி ஒழுகிய சைவ சமயத்தினை இகழ்ந்து ஒதுக்காமல், ஏற்றபெற்றி போற்றி வளர்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். 'தமிழர்கள் தங்களுடைய மொழியையும் இலக்கியங்களையும் குறித்து நாணம் அடைய வேண்டியதில்லை' ("Tamilians need not be ashamed of their language and literature'') என்று ஜி. யு. போப் பாதிரியார் குறிப்பிட்டார். அம்முறையில் சைவர்களாகிய நாம், நம்முடைய சைவசமயம் குறித்தும் சிறிதும் நாணப்படத் தேவையில்லை. ஆங்கில அறிஞர் ஒருவர் தம்முடைய சமயத்தின் உயர்வைக் குறித்துக் கூறி இருப்பதனைத் தழுவி, நாமும் 'சைவன் என்பவன் மனிதர்களில் உயர்ந்த சிறந்த பண்புகளை உடையவன்' ("The highest and noblest type of man'') என்று கூறிக்கொண்டு பெருமிதம் கொள்ளலாம்.

சைவ சமயம் எல்லா வளங்களும் நலங்களும் வாய்ந்தது. அதன்கண் குருட்டுக் கொள்கைகளோ, மூடப் பழக்க வழக்கங்களோ ஏதும் இல்லை. இத்தகைய குறைபாடுகள் நம்முடைய அறியாமையின் விளைவேயன்றி, நம்முடைய சமயத்தின் குறைபாடு அன்று. சில மனிதர்களின் தீய செயல்களும் இயல்களும் கண்டு, அத்தீச் செயல்களுக்கும் இயல்களுக்கும் காரணம் சமயமே என்று, நாம் தவருகக் கருதிக் கொண்டு மயங்கலாகாது. சமயப் போர்வையிற் சிலர் தவறுகள் செய்யலாம். அதனுல் நாம் சமயத்தையே இகழ்ந்து புறக்கணித்தல் முறையாகாது. அது, களை எடுக்கும் கருத்தில், பயிரையே அழித்து விடுவதற்குச் சமமாகும். 'நெற்செய்யப் புற்றேயும்' என்னும் பழமொழிக்கு இணங்க, உண்மையான சமயஉணர்வும் ஒழுக்கமும் உடையவர்களாய், நாம் ஒவ்வொருவரும் வாழத் தலைப்படுவோமாயின், சமயப் போர்வையில் நடைபெறும் பலவகை இழிதகவுகளும் அழிசெயல்களும், நாளடைவில் தாமே மாய்ந்து மறைந்தொழிந்துபோம் என்பது திண்ணம்.

சமுதாய வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் மொழி எத்துணை இன்றியமையாததோ, அத்துணை அளவுக்குச் சமயமும் இன்றியமையாததாகும். உண்மையான சிறந்த தூய சமய நம்பிக்கை

* "Among the many revelations that Mohenjodaro and Harappa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivism has a history going back to the chalco-lithic age or perhaps even further still and that it thus takes its place as the most ancient living faith in the world".

—Sir John Marshall.

யும், ஒழுகலாறும், மக்கட் சமுதாயத்திற்குப் பெரு நலங்களை விளைவிக்கும். நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் போலவே, நமக்குச் சமயப் பற்றும் உணர்வும் இன்றியமையாதனவாகும். மனிதன் உணவினால் மட்டும் வாழவில்லை. ('Man does not live by bread alone'). உயரிய சிந்தனைகளும் கொள்கைகளும் குறிக்கோள்களும், நம்முடைய வாழ்க்கையை வளப்படுத்தி, மாட்சியுறச் செய்கின்றன. எனவே பொதுவாகத் தமிழர்களும், சிறப்பாகச் சைவர்களும் ஆகிய நாம் அனைவரும், நம்முடைய அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் போன்ற அருளாளர்கள் போற்றி வளர்த்த சைவ சமயத்தினை, உண்மையாகக் கடைப்பிடித்து ஒழுகி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, நலம் பல பெற்று உய்ய முற்படுவோமாக!

சைவ சமயம் மிகச்சிறந்த
  தமிழர் சமயம்! பழஞ்சமயம்!
மெய்யிற் செறிந்த விழுச்சமயம்!
  விரிந்த நோக்கின் வியன்சமயம்!
பொய்யில் கேள்விச் சான்றோர்கள்
  போற்றிப் புகழ்ந்த பொருட்சமயம்!
வையம் செழிக்க இதுபரவி,
  மக்கள் நலமே மிகவாழ்க!

—ந.ரா. மு.




திருப்பெண்ணாகடம் அருள்மிகு பிரளயகாலேசுவரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில், ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.,B.L., I.A.S., துணை ஆணையர் திரு. ஏ. வேங்கடாசலம், B.Sc.,B.L., உதவி ஆணையர் திரு. முருகன் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

# அற நிலையச் சட்ட நிர்வாகம்

வருவாய்த் துறை, மானியக் கோரிக்கை எண். 12 (1974).

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள்,**

*அறநிலையத் துறை அமைச்சர்*



மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே!

ஆர்த்தொலிக்கும் அலைகடல்தொடங்கி, முகில் போர்த்திருக்கும் மலை முகடு வரை, விண்ணூர்ந்த கோபுரங்கள் எண்ணிலாதன என்ற பெருமையோடு அறப் பயிர் வளர்க்கும் ஆயிரமாயிரம் நிறுவனங்களைக் கொண்ட தமிழக இந்து சமய அற நிலைய ஆட்சித் துறையின் கொள்கைக் குறிப்பினை இப் பேரவையின் முன் வைத்து, இன்று வரை முடித்த பணிகளை நினைவு கூர்ந்து, நாளை முதல் தொடங்க இருக்கும் பணிகளுக்கு அனைவரின் ஆதரவினைக் கோருவதிலே மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழக இந்து சமய அற நிலையத் துறையின்கீழ்த் தற்போது 157 திருமடங்களும், 832 குறிப்பான அறக் கட்டளைகளும், 14,079 திருக்கோயில்களும் ஆக 15,068 அற நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வற நிலையங்களின் ஆண்டு வருவாய் ரூபாய் 7·86 கோடி என மதிப்பிடப்படுகிறது. தமிழகத் திருக்கோயில்களுக்கு உரிமையான நிலங்களைக் கண்டறிய நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் பணியின் காரணமாக, இவ்வாண்டு 6,541 திருக்கோயில்கள் இத்துறையின் ஆளுகையின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இதில் 2,041 வரி விதிக்கக்கூடிய திருக்கோயில்களும், 4,500 சிறு அற நிலையங்களும் அடங்கும். இவ்வாண்டு இறுதிக்குள் இன்னும் 26,000 புதிய திருக்கோயில்களை அற நிலையத் துறையின் ஆளுகைக்குள் கொண்டு வருவதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு உரிய வகையில் தேவைப்படும் புதிய ஆய்வர்களையும், மற்ற உதவியாளர்களையும் பணியில் அமர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களின் பணியின் காரணமாக இவ்வாண்டு இறுதியில் திருக்கோயில்களின் வருவாய் இன்னும் 2 கோடி ரூபாய் அளவுக்கேனும் உயரும் நல் வாய்ப்புள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

## துறையின் வளர்ச்சியும், தொடர் பணிகளும்

திருக்கோயில்கள் என்பவை வெறும் வழிபடும் இடங்களாக மட்டும் அமையாமல், கலை வளர்க்கும் நிலையங்களாய், பிணியகற்றும் மனைகளாய், அறியாமை இருள் நீக்கி ஒளி வழங்கும் இல்லங்களாய்த் திகழ்ந்து சமுதாயப் பணியாற்றும் நற்கூடங்களாய் அமையவே உருவாயின என்னும் உண்மையின் அடிப்படையில், தமிழகத்துத் திருக்கோயில்கள் இத் துறையின்

மூலம் ஆற்றி வரும் சிறப்பு மிக்க பணிகள் பலவற்றுள் சிலவற்றினை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன்—

(1) *1967-இல் அற நிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட அற நிலையங்களின் எண்ணிக்கை 9,600 என்ற நிலை மாறி, 1974-இல் 15,068 ஆக உயர்வு.

(2) *1967-ல் ஆண்டு வருவாய் ரூ. 3,98,52,754-லிருந்து 1974-ல் ரூ. 7,86,00,000 ஆக உயர்வு.

(3) *1967-ல் தொடங்கி 1973 இறுதி வரை ரூ. 12,44,00,000 செலவில் 3,095 திருக்கோயில்களில் திருப்பணி.

(4) *1967-ல் திருக்கோயில் திருப்பணிகளுக்காக அரசு மானியம் ரூ. 3 இலட்சம் என்று தொடங்கித் தற்போது 1974-75-க்கு ரூ. 15 இலட்சமாக உயர்வு.

(5) *தமிழ்ப் பெரு மக்களின் ஒன்றுபட்ட வேண்டுகோளை ஏற்றுத் தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் அனைத்திலும் தமிழ் வழிபாட்டு முறை விரிவு படுத்தப் பட்டது. சிலரின் எதிர்ப்புக் குரலும் இன்று நீங்கி அனைத்துக் கோயில்களிலும் தமிழ் வழிபாட்டு முறை நடைமுறையில் உள்ளது.

(6) *சாதி மத பேதமற்ற முறையில் தகுதி அடிப்படையில் அருச்சகர் நியமன முறையமைய அரசியல் சட்டத் திருத்த முயற்சி.

(7) *சட்டபூர்வமான முறையில் தாழ்த்தப்பட்டோருக்கு அறங்காவலர் குழுவில் கட்டாயமாக இடம் ஒதுக்கீடு.

(8) *பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நிதி உதவி—உயர்ந்தவராயினும் தாழ்ந்தவராயினும் வறியோராயினும் எளியோராயினும் பணக்காரரெனினும் ஏழையரெனினும் ஆண்டவன் முன் அனைவரும் சமம். ஆகவே சமமாகவே நடத்தப்பட வேண்டும் என்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை ஏற்று ''மிக முக்கியமானவர்களுக்கு''க் கோயில் ''பரிவட்ட'' மரியாதை தேவையில்லை என்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை ஏற்று ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(9) *கண்ணொளி இழந்தோருக்குக் கண்ணொளி வழங்க நிதி உதவி.

(10) *அண்மையில் தீயினால் பாதிக்கப் பட்டோருக்கு உதவி.

(11) *செவிடர் ஊமையர்க்கான பள்ளிகள் இரண்டு.

(12) *அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்க அன்பு இல்லங்கள்.

(13) *சிறுர் காப்பகங்கள் ஐந்து.

(14) *முதியோர் இல்லங்கள் மூன்று.

(15) *ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்கும் திட்டம்.

(16) *ஏழை எளியோர்க்கான இலவசத் திருமணங்கள்.

(17) *ஏழை எளியோருக்கு உதவிடும் வகையில் கட்டி முடிக்கப்பட்ட திருமண மண்டபங்கள் 73.

(18) *பணி தொடங்கப்பட்டு விரைவில் முழுமையடைய இருக்கும் திருமண மண்டபங்கள் 134.

(19) *அறிவு வளர்க்க அற நிலையங்களைச் சார்ந்த நூலகங்கள் 204.

(20) *சித்த வைத்திய மருத்துவ மனைகள் 23. ஆங்கில முறை மருத்துவ மனை ஒன்று.

(21) *திருக்கோயில்கள் மூலம் பராமரிக்கப்படும் கலைக்கூடங்கள் ஐந்து.

(22) *திருக்கோயில் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு.

(23) *ரூபாய் 3·5 இலட்சம் செலவில் திருச்செந்தூரில் கடல் அரிப்புத் தடுப்புத் திட்டம்.

(24) *இந்து சமயப் பண்பாட்டுக் கல்லூரி ஒன்று.

(25) *கீழ்த்திசை மொழிக் கல்லூரி ஒன்று.

(26) *கலைக் கல்லூரிகள் நான்கு.

(27) *மகளிர் கலைக் கல்லூரிகள் நான்கு.

(28) *உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகள் பதினான்கு.

(29) *நாதசுவர, ஊமையர்க்கான பள்ளிகள் இரண்டு.

(30) *வழிபாட்டுப் பயணிகளுக்குப் பல்வேறு தலங்களில் தங்கும் விடுதிகள்.

(31) *தங்கத்தில் தேர்கள் இரண்டு.

(32) *நியாயமான வருமானத்தை அற நிலையங்கள் பெறும் வகையில், தமிழ் நாடு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து அற நிலையங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் அனைத்திற்கும் விதி விலக்களித்துள்ளது.

இவைகளன்னியில் சிறப்பாக எடுத்துச் சொல்லப்பட வேண்டிய பணிகள் குறித்த குறிப்பினை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன்.

சமயப் பெருமை மிக்க திருக்கோயில்களாக மதிக்கப்பட்டுப் பெருமையோடு எண்ணப்படும் கீழ்க்காணும் எட்டுத் திருக்கோயில்களில் கடந்த ஆண்டில்குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெற்றது.

1. அருள்திரு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

2. அருள்திரு பாடலீசுவரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர்.

3. அருள்திரு பிரளயகாலேசுவரர் திருக்கோயில், பெண்ணாகடம்.

4. அருள்திரு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில், பவானி.

5. அருள்திரு மந்தாரகிரி வேலாயுத சுவாமி திருக்கோயில், தென்சேரிமலை.

6. அருள்திரு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோவை.

7. அருள்திரு வெள்ளீசுவரர் திருக்கோயில், மயிலை, சென்னை.

8. அருள்திரு கோமளேசுவரர் திருக்கோயில், சென்னை.

குறிப்பிடத் தக்க வகையில் பெருந்தொகைச் செலவில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேறி வரும் திருப்பணிகள் சிலவற்றை இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன்—

1. அருள்திரு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

2. அருள்திரு இராமநாத சுவாமி திருக்கோயில், இராமேசுவரம்.

3. அருள்திரு ஆத்மநாத சுவாமி திருக்கோயில், ஆவுடையார்கோயில்.

4. அருள்திரு வேதகிரீசுவரர் திருக்கோயில், திருக்கழுக்குன்றம்.

5. அருள்திரு பூவராக சுவாமி திருக்கோயில், திருமுட்டம்.

6. அருள்திரு தியாகராச சுவாமி திருக்கோயில், திருவாரூர்.

7. அருள்திரு மாசிலா ஈசர் திருக்கோயில், தரங்கை.

8. அருள்திரு மாசிலாமணி ஈசர் திருக்கோயில், வடதிருமுல்லைவாயில்.

9. அருள்திரு கோனியம்மன் திருக்கோயில், கோவை.

10. அருள்திரு சங்கமேசுவரர் திருக்கோயில், கோட்டை, கோவை.

11. அருள்திரு கூடலழகர் திருக்கோயில், மதுரை.

12. அருள்திரு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், அவிநாசி.

13. அருள்திரு வடபத்திரசாயி திருக்கோயில், திருவில்லிபுத்தூர்.

14. சேக்கிழார் பெருமை சேர்த்த அருள் திரு நாகேசுவரசுவாமி திருக்கோயில், திருநாகேசுவரம்.

15. நந்தன் புகழ் சேர்த்த அருள்திரு சிவலோகநாதசுவாமி திருக்கோயில், திருப்புன்கூர்.

(16) கூடல்மாநகர் அமைந்த அருள்திரு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

(17) அருள்திரு கரும்புலீசுவரர் திருக்கோயில் இராசகோபுரத் திருப்பணி, குடியாத்தம்.

(18) அருள்திரு அருணுசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணுமலை.

இவைகளன்னியில் இவ்வாண்டு சிறியனவும் பெரியனவுமாகிய திருக்கோயில்கள் பல நூற்றுக் கணக்கானவை திருப்பணி வேலைகளை மேற்கொண்டு நிறைவுறும் தருவாயில் இருக்கின்றன. வரும் ஆண்டில் திருக்கோயில்களின் நிதி உதவியுடனும் அரசு நிதி உதவியுடனும் ரூ. 4 கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டுத் தொகையில் 1,500 திருக்கோயில்களின் திருப்பணி மேற்கொள்ளப்பட்டுத் திருக்கோயில்கள் செம்மையுடன் காப்பாற்றப்படும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

ஆண்டுதோறும் ரூ. 20,000-க்கும் அதிகமான வருவாயைப் பெற்று, அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளரின் நேரடி நிருவாகத்தின் கீழ்ச்செயல்படும் சமய நிறுவனங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் 377 என்ற எண்ணிக்கையிலிருந்து இவ்வாண்டு 428 ஆக உயர்ந்துள்ளது. சமய நிறுவனங்களின் வருவாய் பெருகி வருவதற்கு இது ஓர் சான்ருகும். இவ்வாறு பெருகி வரும் நிதி வாயில்களின் உதவியோடு வழிபடும் மக்களுக்கும், சமுதாயத்தின் கீழ்த்தட்டில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் உதவும் வகையில், இனி வரும் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் பணிகள் குறித்த சிறு குறிப்பினை இங்கு வழங்கிட விரும்புகிறேன்—

(1) பழனி நகரில் 108 அறைகள் கொண்ட ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கும் புதிய தங்கும் விடுதி.

(2) திருத்தணி நகரில் 100 அறைகள் கொண்ட புதிய தங்கும் விடுதி.

(3) பழனி நகரில் சுமார் 10 இலட்சம் மதிப்பீட்டில் ஆங்கில முறை மருத்துவ மனையின் விரிவாக்கம்.

(4) பழனியைச் சுற்றியுள்ள சிற்றூர் வாழ் பொது மக்களுக்கு உதவிடும் வகையில் ''நடமாடும் மருத்துவ மனை.''

(5) திருச்செந்தூரில் சுமார் 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கண் மருத்துவப் பிரிவும், தாய்சேய் நலப் பிரிவும் கொண்ட பொது மருத்துவ மனை.

(6) நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் சார்பில் புதிய சித்த வைத்திய மருத்துவ மனைகள்.

(7) ஆண்டு வருவாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அனைத்துத் திருக்கோயில்களின் மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பால் வழங்கும் திட்டம்.

(8) திருக்கடவூர்ப் பிச்சைக் கட்டளை சார்பில் ஓர் உயர்நிலைப் பள்ளி.

இவைகளோடு திருத்தணி, சமயபுரம், திருவேற்காடு முதலிய பெரிய திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து கண் மருத்துவ மனைகள் தொடங்கவும் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அதே போல் பழனியில் மகளிர்க்கான ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரி ஒன்றினைத் தொடங்கவும், கோவை மாவட்டம், பண்ணுரி அருள் திரு மாரியம்மன் திருக்கோயில் சார்பில் உயர்நிலைப்பள்ளி ஒன்றும் துவங்கத் திட்டமிடப்பட்டு அது ஆய்வில் உள்ளது.

திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டை அருள் திரு தாயுமானசுவாமி திருக்கோயில்; செங்கை மாவட்டம் திருக்கழுக்குன்றம் அருள்திரு வேதகிரீசுவரர் திருக்கோயில்; வடஆற்காடு மாவட்டம் சோளிங்கபுரம் அருள்திரு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில்; சேலம் மாவட்டம்,

திருச்செங்கோடு அருள்திரு அர்த்த நாரீசுவரர் திருக்கோயில்; கோவை, மருதமலை அருள்திரு முருகன் கோயில் ஆகிய மலைக் கோயில்களுக்கு மின்விசையேற்றப் பொறி வசதி அளிக்க இத் துறை கருதி, விரைவிலேயே இப் பொறிகளை உள்நாட்டிலேயே தயாரித்து அமைக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள இருக்கிறது.

அடுத்து இவ்வாண்டு திருப்பணிக்காக வழங்கப்படும் ரூபாய் 15 இலட்சத்தில், கீழ்க்காணும் ஐந்து திருக்கோயில்களுக்கும் ஒரு இலட்சம் என்ற வீதத்தில் அளிக்கப் படவிருக்கிறது :—

(1) அருள்திரு தியாகராச சுவாமி திருக்கோயில், திருவாரூர்.

(2) அருள்திரு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேசுவரம்.

(3) அருள்திரு அருணசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணமலை.

(4) அருள்திரு அரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம்.

(5) அருள்திரு சுவாமி நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

பல இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்பட்ட இத் திருக்கோயில்களின் திருப்பணிகள் விரைந்து முடிவதற்கான முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு திருப்பணிகளைத் தொடங்கிப் பழம் பெரும் திருக்கோயில்களைக் கண்ணே போல் காத்தல் மட்டுமின்றி, உபரி நிதியிலிருந்து பல்வேறு சமுதாயப் பணிகளை மேற்கொள்ளல் மட்டுமின்றி, இத்துறை தனது கட்டுப்பாட்டிற்குள் இது வரை சேராத திருக்கோயில்களைக் கண்டறிந்து அவைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், திருக்கோயில்களின் நில உடைமைகள் உண்மையிலேயே திருக்கோயில்களுக்கு உரியனவாகி அவற்றின் பலன் திருக்கோயில்களையே அடையவுமான வகையில் பல சிறப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இது பற்றிய விவரங்களைக் கீழே கொடுக்க விரும்புகிறேன் :—

வருவாய்த் துறையிலிருந்து நியமிக்கப்பட்ட தனிப்பணியாளர்கள் மூலம் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் பற்றிய ஆய்வு கடந்த ஆண்டு தொடர்ந்து நடத்தப்பட்டது. வடாற்காடு, மதுரை, முகவை, திருச்சி ஆகிய மாவட்டங்களைப் பொறுத்த வரையில் இப்பணியின் பெரும் பகுதி முடிவுற்றுவிட்டது. மற்ற மாவட்டங்களில் உள்ள எஞ்சிய பணி, குறைந்த அளவுப் பணியாளர்களைக் கொண்டு, 1—3—1974 முதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணி முழுவதும் இவ்வாண்டிலேயே முடிவுறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தொடக்கநிலை ஆய்வின் பலனக 41,306 புதிய நிறுவனங்கள், 2,01,040 ஏக்கர் நிலங்களைக் கொண்டனவாக இருப்பதைச் சிறப்புப் பணியாளர்கள் கண்டறிந்து தெரிவித்தனர். இதன் அடிப்படையில் துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்துக் கீழ்க்காணும் விவரம் பயன் தரத் தக்கதாய் அமையும் என்று கருதுகிறேன்.

| | 1972—73 முடிய. | 1973—74 முடிய. | கூடுதல் |
|---|---|---|---|
| 1. புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்ட அற நிலையங்களின் எண்ணிக்கை. | 40,247 | 1,059 | 41,306 |
| 2. மேற்காணும் நிறுவனங் களுக்குச் சொந்தமான நிலச் சொத்தின் பரப்பளவு. | 1,98,920.53 (ஏக்கர்) | 2,422.61 (ஏக்கர்) | 2,01,343.14 (ஏக்கர்) |
| 3. அறநிலையத் துறையின் ஆளு கைக்கீழ்க் கொண்டு வர நட வடிக்கை மேற்கொள்ளப் பட்ட முதலறிக்கை எண் ணிக்கை. | 6,000 | 8,674 | 14,674 |
| 4. மேற்காணும் நிறுவனங் களுக்குச் சொந்தமான நிலங் களின் பரப்பளவு. | 44,664.08 (ஏக்கர்) | 33,700.75 (ஏக்கர்) | 78,364.83 (ஏக்கர்) |
| 5. இத் துறையின் ஆளுகைக் குள் கொண்டு வரப்பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை | 4,373 | 6,541 | 10,914 |

| | |
|---|---|
| 1971—72 முடிய | 2,211 |
| 1972—73 முடிய | 2,162 |
| மொத்தம் | 4,373 |

| | | | |
|---|---|---|---|
| 6. இத் துறையின் ஆளுகையின் கீழ்க் கொண்டு வரப்பெற்ற நிறுவனங்களின் நிலத்தின் பரப்பு. | 16,000.50 (ஏக்கர்) (உத்தேசமாக) | 28,218.00 | 44,218.50 |

மேலும் இத் தனிப் பணியாளர்கள், அற நிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களாயிருந்தும் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள 30,227 நேர்வுகளுக்குரிய 38,062 ஏக்கர் பரப்புள்ள நிலத்தையும் கண்டு அறிந்து தெரிவித்தனர். இவைகளில் 12,279 நேர்வுகளுக்குரிய 13,832 ஏக்கர் பரப்புள்ள நிலத்தைத் திருக்கோயில்களின் உண்மையான கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சியவற்றையும் திருக்கோயில்களின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் முழுமையாகத் திருக்கோயில்களின் கட்டுப்பாட்டுக்குக்கொண்டு வரப்படின், இதன் மூலம் ஆண்டொன்றுக்குத் திருக்கோயில்களுக்குக் கூடுதலாக ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

விலை மதித்தற்கரிய செப்பு, ஐம்பொன் மற்றும் கற்படிவங்கள் தமிழகத்தின் திருக்கோயில்கள் அனைத்திலும் காணக்கிடக்கின்றன. இவைகளைக் கண்ணேபோல் காக்கவும், இவைகளுக்கு எவ்வகையாலும் ஊறு நேரா வண்ணம் தடுக்கவும், இவைகளைக் கடத்திடா வண்ணம் பாதுகாத்திடவும், அனைத்து முயற்சிகளும் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டன. எனினும் ஒரு சில இடங்களில் கடவுளர் சிலைத் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு நேரங்களில் காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு, பாதுகாப்பு முயற்சிகள் மிகவும் சீரான வகையில் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வாண்டுத்தொடக்கத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திய பொங்கல் சுற்றுலா விழாப் பொருட்காட்சியில் இத் துறை பங்கு கொண்டு, திருக்கோயில் வடிவில் அரங்கு ஒன்றை அமைத்து, அதில் ஆறும் நூற்றாண்டு வரையிலான அரிய கலைப் பொருள்கள், வெண்கலப் படைப்புகள், தந்தப் பதுமங்கள் முதலியவற்றை அவற்றின் காலக் குறிப்போடு வைத்தது. ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய வீர பாண்டியக் கட்டபொம்மன் வணங்கி வந்ததாகக் கூறப்படும் திருச்செந்தூர் அருள்திரு சுப்பிரமணிய சுவாமி படிமமும் அவற்றில் ஒன்றாகும். தொன்மை வாய்ந்த இக் கலைச் செல்வங்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளை மிகவும் கவர்ந்து வருவதால் அவைகளை மிகவும் நுட்பமான ஏற்பாடுகளுடன் பாதுகாக்க நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



1959ஆம் ஆண்டு தமிழ்நாடு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிகளில் இணைக்கப்பட்ட இணைக்கப்படாத) தேவஸ்வம் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1959).

1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு 30-வது சட்டத்தின்படி கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டத்திலும் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம் என்று அழைக்கப்படும் நிறுவனங்களைக் கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் நிருவகித்து, கட்டுப்படுத்தி, மேற்பார்வையிட்டு வருகிறது. இப் பகுதியில் உள்ள மற்ற இதர சமய நிறுவனங்கள் 1959ஆம் ஆண்டு 22-வது தமிழ்நாடு சட்டத்தின்படி, இந்து சமய அறக்கட்டளைகளின் கீழ் வரும். மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இந்த தேவஸ்வம் வாரியம் இப் பகுதிகளில் ரூ. 13,68,000 அரசு மானியத்தோடு செயல்படுவதன் மூலம் இப் பகுதித் திருக்கோயில்களுக்குக் கிடைக்கும் நலன்களைவிட இந்து சமய அற நிலையத் துறையின் 1959-வது ஆண்டுச் சட்டத்தின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இப் பகுதிகளைக் கொண்டு வருவதன் மூலம் பெரும் பயன் அடைய முடியும் என்பதன் காரணமாக 1959-வது ஆண்டுச் சட்டத்தினை முழுமையாக இப் பகுதிகளுக்கும் விரிவாக்கிடும் வகையில் சட்டத்தைத் திருத்துவதற்கும் மத்திய அரசை இவ்வரசு பன்முறை வலியுறுத்தியதன் காரணமாக அண்மையில் அதற்குரிய அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே இப் பேரவையில் முறையான திருத்தம் வெகு விரைவில் கொண்டு வரப்பட்டு, இப் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களின் முறையான நிருவாகத்திற்கு வழி வகுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து முன்னாள் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தின் நிர்வாகத்தின் கீழிருந்த புதுக்கோட்டைத் திருக்கோயில்களின் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் அவைகள் ரூ. 4 இலட்சம் பெற்று வருகின்றன. இதுவன்றித் தமது வழிபாட்டு இல்லத்தைப் பராமரித்து வருவதற்காகப் புதுக்கோட்டை முன்னாள் மன்னருக்கு ஆண்டுதோறும் ரூ. 6,000 அளிக்கப்பட்டு வருகிறது.

**திருக்கோயில் திங்கள் ஏடு**

1958-ல் தொடங்கப்பட்டு, திங்கள் தோறும் வெளிவரும் ''திருக்கோயில்'' இதழ், தமிழ்நாட்டில் மட்டுமின்றி அண்டை அயல் நாடுகளிலும் 6,400 சந்தாதாரர்களைக் (கடந்த ஆண்டு சந்தாதாரர்களின் எண்ணிக்கை 4,925) கொண்டுள்ளது.* இந்து சமய தத்துவக் கொள்கைகளையும், திருக்கோயில்களின் தொன்மையையும், வரலாற்றையும் சிறந்த முறையில் எடுத்து இயம்பும் இந்த ஏடு, சமய இலக்கிய அறிஞர் பெருமக்களின் அறிவார்ந்த கட்டுரைகளைக் கொண்டு, கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் வண்ணம் வெளிவருகின்றது.

**தெய்வீகப் பேரவை**

கடந்த ஆண்டினைப் போலவே, இப்பேரவை மத அடிப்படையில் இளைஞர்கள் போதுமான அறிவு பெறும் வகையில், தனது பணியினை ஆற்றி வருகிறது.

**திருக்கோயில்களின் பணியாளர்கள்**

கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத் தொடர் கூட்டத்தில் உரையாற்றும்போது, திருக்கோயில்களில் பணி புரியும் பணியாளர்களின் ஊதியத்தை ரூ. 10-க்கும் குறையாத அளவில் உயர்த்துவதற்கான செயற்குறிப்பை அறிவித்தேன். அதன் அடிப்படையில் தமிழகத்தில் 14,000 திருக்கோயில்களில் பணி புரியும் சுமார் 50,000 பணியாளர்கள் பலனடைந்துள்ளனர். 1973—74-ஆம் ஆண்டில் திருக்கோயில்கள் இவ் வகையில் கூடுதலாகச் சுமார் 67.60 இலட்சம் ரூபாயைச் செலவிட்டுள்ளன.

இறுதியாக, ஆண்டு வருமானம் ஒரு இலட்சம் ரூபாய் வருவாய் உடைய திருக்கோயில்களில் பணி புரியும் பணியாளர்களுக்கு மட்டுமே தற்போதைய விதிகளின் கீழ், வருங்கால வைப்பு நிதிச் சலுகை அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. தற்போது ரூ. 10,000-மும் அதற்கு மேற்பட்டும் ஆண்டு வருவாய் உள்ள கோயில்களின் பணியாளர்களுக்கும், இவ் வருங்கால வைப்பு நிதிச் சலுகையை அளிக்க, இப்போது முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சமய நெறிமுறைகளில் எவ்வகையிலும் தலையிடாமல், தமிழகத்தின் கலைப் பெட்டகங்களாய் அமைந்துள்ள திருக்கோயில்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, அவைகளைப் பேணிக் காக்கும் பெரும் பொறுப்பில் முனைப்போடு செயல்படும் இவ்வரசு தொடர்ந்து இப்பாதையிலேயே நடைபோடும் என்று கூறி, அதற்கு அனைவரின் ஒருமித்த ஆதரவு வேண்டும் வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

—மு. கண்ணப்பன்

அற நிலைய அமைச்சர்.

* இம்மாதம் 'திருக்கோயில்' இதழின் உறுப்பினர் தொகை 7000 (ஏழாயிரம்) ஆக உயர்ந்துள்ளது.

—ஆசிரியர்.

# வரவேற்புச் சிறப்புரை

[திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில், 30—3—74 அன்று, அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.B.L., I.A.S., அவர்கள் தலைமையில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் வருகை தந்து, கொடியேற்று மண்டபத் திறப்பு விழா நிகழ்த்தியபோது, ஷி திருக்கோயிற் கோடி அர்ச்சனைக் குழுவினர் மனமுவந்து அன்புடன் வழங்கிய வரவேற்புச் சிறப்புரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்.]

**அறிவாற்றல் சிறந்த அமைச்சர் ஏறே !**

திருவல்லிக்கேணியில் உள்ள அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்தது; பேயாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் என்னும் மூன்று ஆழ்வார்கள், இத்தலத்தைப் புகழ்ந்து போற்றிப் பாடியுள்ளனர். தொண்டைமான் என்னும் பழந்தமிழ் மன்னனின் வேண்டுகோட்கு இணங்கி, திருவேங்கடமுடையான் உருக்குமிணிப் பிராட்டியாருடனும், அநிருத்தன் பிரத்தியும்நன் பலராமன் சாத்தகி ஆகிய தன் குடும்பத்தினருடனும், காட்சியளித்து அருள் புரிந்த தலம், இத் திருவல்லிக்கேணியே என்பது வரலாறு. இத்தகைய சிறப்பு வாய்ந்த இத் திருக்கோயிலுக்கு, அன்புடன் வருகை தந்து சிறப்பித்த தங்களை வருக! வருக! என்று பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

**கருணையுள்ளம் கொண்ட கண்ணப்பர் பெரும!**

நம்முடைய செந்தமிழ்த் தெய்வத் திருநாடு, வேறு எந் நாட்டிலும் காண இயலாதபடி, விண்ணளாவி உயர்ந்து ஓங்கித் திகழும் எண்ணற்ற பல திருக்கோயில்களை உடையது. சிற்பம் ஓவியம் இசை நடனம் இலக்கியம் முதலிய கலைகள் அனைத்தும், இத் திருக்கோயில்களில் தொன்று தொட்டு வளர்ந்து வருகின்றன. வரலாற்றுச் சிறப்பு மிக்க இப் பழம் பெரும் கோயில்களை யெல்லாம், நமது தமிழக முதல்வர் தமிழவேள் மாண்பு மிகு டாக்டர் கலைஞர் அவர்களின் அரிய தலைமையின் கீழ், அறநிலைய அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள, அன்பியற் பெருந்தகையாகிய தாங்கள், கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பாதுகாத்து வருகின்றீர்கள். கைவளம் சான்ற தங்களால், எத்தனையோ பல திருக்கோயில் திருப்பணிகள் தொடங்கி வைக்கப்பெற்று, நன்கினிது நிறைவேறி, ஏராளமான திருக்குட நன்னீராட்டு விழாக்கள் சிறப்புற நிகழ்ந்து வருகின்றன! இதனால், தங்களுடைய அருமையும் பெருமையும் வாய்ந்த அற நிலையத் துறைப் பணிகளை, மக்கள் அனைவரும் மனமாரப் போற்றி மகிழ்ந்து வருகின்றனர்.

**அருங்குணங்களுக்கு ஓர் உறைவிடமாம் பெருந்தகையே !**

பண்டைத் தமிழ்ப் பெரும் தொண்டைமான் அரசன், இத் திருவல்லிக்கேணிக் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தான். ‘‘மன்னு தண்பொழிலும், வாவியும் மதிலும்மாடமாளிகையும் மண்டபமும் தென்னன் தொண்டையர்கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி’’ என்று திருமங்கையாழ்வார் இத்தலத்தைப் புகழ்ந்து போற்றியுள்ளார். இத் திருக்கோயிலில் திருவாய்மொழி மண்டபத்தைப் போலவே, கொடியேற்று மண்டபத்தையும் அமைக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன், கோடி அர்ச்சனை விழாக்குழுவினர்,

கொடியேற்று மண்டபத் திருப்பணியை மேற்கொண்டனர். இதன் தொடக்க விழாவிற்கும் தாங்கள் வந்திருந்து, 22—4—1972 அன்று அடிக்கல் நாட்டி உதவினீர்கள். தங்களுடைய கைவளத்தின் நலத்தால், இந்த மண்டபத் திருப்பணி, மிகவும் சிறப்புற நடந்து, விரைவில்நிறைவு எய்தியது. ஆதலின், அதனைத் திறந்து வைக்கும் சிறந்த பணியையும், தாங்களே முன்னின்று நடத்தி வைக்க இசைந்தருளி, இன்று இங்குத் தாங்கள் வருகை தந்து சிறப்பித்துள்ளமைக்கு, நாங்கள் பெரிதும் மகிழ்ந்து, மிகவும் நன்றியும் வணக்கமும் செலுத்தி மகிழ்கின்றோம். இதுபோன்றே இன்னும் பல நல்ல திருப்பணிகள், இத் திருக்கோயிலில் நடைபெறுவதற்குத் தாங்கள், தங்களுடைய மேலான நல்லுரைகளை வழங்கி, இந்தக் கொடியேற்று மண்டபத்தைத் திறந்து வைக்குமாறு, மிகவும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

திருவல்லிக்கேணி, இங்ஙனம்,
30—3—74.

**கோடி அர்ச்சனைக் குழுவினர்.**



இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலில் நிகழ்ந்த சேதுபதி மண்டபத் திறப்பு விழாவில், அறநிலைய ஆணையர் திரு கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., அவர்கள் உரை நிகழ்த்துதல்.

# காரைக்குடி கம்பன் விழாவில்

*மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் உரை.*

[பல்லாயிரக் கணக்கில் இலக்கியச் சிந்தனையாளர்களும், பெரும் புலவர்களும் கூடியிருக்க, மிகவும் சிறப்புற நடைபெற்ற, கரைக்குடி கம்பன் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்து, நம் தமிழக முதல்வர் - தமிழவேள் - மாண்புமிகு டாக்டர் திரு. கலைஞர் அவர்கள் ஆற்றிய அரிய இனிய சிறப்புரை, இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடப்படுகின்றது.

—ஆசிரியர்]



"கம்பர் விழாவில் நான் கலந்துகொள்வதா என்ற கேள்விக்கு நான் முன்பே விளக்கம் தந்திருக்கின்ற காரணத்தால், மீண்டும் அதற்கான விளக்கத்தை அளிக்கத் தேவையில்லை என்றே கருதுகின்றேன்.

காரைக்குடிவாழ் தமிழ்ப் பெருமக்கள், ஒருமுறை விளக்கம் பெற்ருலே, அதை மனத்தில் பதிய வைத்துக் கொள்ளக் கூடிய திறமை வாய்ந்தவர்கள் என்பதால், மீண்டும் மீண்டும் விளக்கம் அளிப்பது, தேவையில்லாததென்று நான் நம்புகின்றேன்.

கம்பருக்குச் சிலை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, சென்னைக் கடற்கரையில் மிக முக்கியமான இடத்தில் கம்பர் சிலையை அமைத்திருப்பதிலிருந்தே, இந்த அரசுக்காணுலும் அல்லது அரசை நடத்துகின்ற ஆளும் கட்சியைச் சேர்ந்த எங்களுக்காணுலும், கம்பர் புலமையின் மீது எந்தவிதமான காழ்ப்பும் இல்லையென்று, அனைவரும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

இந்த விழாவிற்குக் குறித்த நேரத்தில் நான் வரவேண்டுமென்பது திரு. கணேசனுடைய அன்புக் கட்டளையாகும். நானும் குறித்த நேரத்தில் வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டேன்-இதிலும் மாநில சர்க்கார் மத்திய சர்க்கார் தகராறை எழுப்ப நான் விரும்பவில்லை-புகைவண்டி குறித்த நேரத்திலே வராத காரணத்தினுல் நான் திருச்சியிலே இறங்கி, அங்கிருந்து காரைக்குடி வர வேண்டியவனுனேன். அதனுல் ஐந்தாறு நிமிடங்கள் தாமதமாகி விட்டதென்ருலும், நான் வருகிற வரை அமாவாசை காத்திருக்காது என்பதற்கு ஏற்ப, நம்முடைய கணேசன் அவர்கள் குறித்த நேரம், குறித்த நேரம்தான்-யார் எந்தப் பதவியிலே இருந்தாலும் அதைப்பற்றி உண்மையான தமிழுணர்ச்சி கொண்டவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்ற வீரத்துக்குச் சான்ருக, குறித்த நேரத்திலே இந்த விழாவைத் தொடங்கி விட்டதைப் பாராட்டுகின்றேன்.

முதலமைச்சர் வருகிறவரை காத்திருக்க வேண்டும், அல்லது அவருக்குப் பெரிய ஆளுநர் வருகிறவரையிலே காத்திருக்க வேண்டும் என்றெல்லாம் -ஆட்களுக்காக நிகழ்ச்சி என்றில்லாமல் -நிகழ்ச்சிக்காக ஆட்கள் என்கின்ற அந்த உணர்வை உருவாக்கிய வகையிலே, சா. கணேசன் அவர்கள் நடந்து கொண்டது மற்றவர்களுக்கெல்லாம் வழி காட்டத் தக்கதாக அமையும் என்றே நான் கருதுகிறேன்.

நான் வந்து நாற்காலியில் அமர்ந்ததும் என்பின்னுல் வந்து, கணேசன் அவர்கள் ஏன் தாமதமாக வந்தீர்கள் என்று கேட்டதாக, எதிரிலே உட்கார்ந்திருக்கக்கூடிய நீங்களெல்லாம் கருதியிருக்கக்கூடும். ஆனுல் அவர் பின்னுவிருந்து எச்சரித்தது என்னவென்ருல், தயவு செய்து நாற்காலியை நகர்த்தி விடாதீர்கள், ஏனென்ருல் நாற்காலியோடு இந்தக் குடை பொருத்தப்பட்டிருக்கிறது. நீங்கள் நாற்காலியை நகர்த்திஞல் குடை விழுந்துவிடும் என்று சொன்னுர்கள். அதை நன்ருகப் புரிந்து கொண்டிருக்கிறேன்.

ஏன் நாற்காலி நகர்ந்தால் குடை கவிழுமென்பதைப் பெரியவர் சா. கணேசன் அவர்கள் அன்புள்ளத்தோடு எனக்கு எச்சரிக்கை செய்ததற்காக, நான் அவருக்கு நன்றிசெலுத்தப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். அவசரத்தில் எங்கே நகர்த்திவிடப் போகிறேனே என்கின்ற ஆர்வத்தால், அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்து, இந்த மேடையைப் பொருத்ததாக இருந்தாலும், அது எங்கெங்கே போய்ப் பொருந்துகிறது என்பதைப் புரிந்து கொண்ட உங்களேயும் நான் பாராட்டுகின்றேன். உங்களது அன்புக்கு மனங் கனிந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆண்டுதோறும் நடைபெறுகின்ற இவ்விழா இன்னும் வசதியோடும், வாய்ப்போடும் நடைபெறுகின்ற வகையிலே, தமிழர்கள் தமிழ்க் கவிஞர்களே மறந்திட மாட்டார்கள். தமிழ்ப் புலவர்களுக்கு எந்நாளும், நன்றிக் கடமையைச் செலுத்துவார்கள் என்கின்ற ஒரு புதிய அத்தியாயத்தை நாம் இன்றைக்கு விரிவாக எழுதத் தொடங்கியிருக்கின்ருேம்.

நான் வார்த்தைகளே அளந்து போடுகின்றேன். இன்றைக்கு விரிவாக எழுதத் தொடங்கியிருக்கின்ருேம் என்றுதான் குறிப்பிட்டேன்.

கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பே அந்த நன்றிக் கடன் ஆற்றுகின்ற செயலைக் காரைக்குடியில் கணேசன் அவர்கள் கம்பனுக்காகச் செலுத்தத் தொடங்கிவிட்டார்கள். இப்பொழுது அந்த நன்றிக் கடன் செலுத்துகின்ற முயற்சி விரிவான முறையிலே செய்யப்பட்டு வருகின்றது.

அதற்கு எடுத்துக்காட்டுத்தான், செட்டி நாட்டரசர் குறிப்பிட்டதைப் போல, பூம்புகார் புதுக்கோலம் காணுகின்ற காட்சியாகும். அதற்கு எடுத்துக்காட்டுத்தான், சென்னே மாநகரில் திருவள்ளுவருக்கு ஒரு பெரிய கோட்டத்தைப் பல இலட்ச ரூபா செலவிலே அமைப்பதற்கு அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற சீரிய சிறப்புமிக்க முயற்சிகளாகும். இந்த ஏற்பாடுகள் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் நடைபெற்ருக வேண்டும்.

நாட்டரசன் கோட்டையிலே வந்து தங்கினுர் கம்பர் என்பதற்காக, அங்கு நினைவுச் சின்னமாக அருகிலே உள்ள காரைக்குடியில் கம்பனுக்கொரு மணி மண்டபம்; அதைப் போலவே பெரும் புலவர்கள் பல பேர் வாழ்ந்த மண், பிறந்த மண், அவர்கள் உலவிய சிற்றூர்கள், பேரூர்கள் இவைகளெல்லாம் தமிழகத்தில் ஏராளம், ஏராளம். அந்த இடங்களே எல்லாம் கண்டு அந்த இடங்களில் அவர்களுக்கான நினேவுச் சின்னத்தை எழுப்புவது, பெரிய அள

விலே இலட்சக்கணக்கான ரூபாய்ச் செலவிலே செய்யாவிட்டாலும், சிறிய சிறிய அளவிலேயாவது, அப்படிப்பட்ட நினைவுச் சின்னங்களை எழுப்புவது நாம் தமிழ் உணர்வை, நன்றி உணர்வை, தமிழ் எழுச்சியை மக்கள் உள்ளத்திலே என்றென்றும் பசுமையாக வளர்த்துக் கொண்டிருப்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதற்குத்தான், அதைக் குறிப்பிடுகின்றேன்.

கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு நானும் டாக்டர் நாவலர் அவர்களும் காரிலே பயணம் செய்தபொழுது, ஒக்கூர் என்ற ஒரு ஊரைக்கண்டு, இங்குதான் ஒக்கூர் மாசாத்தியார் பிறந்தார் என்பதை எங்களுடைய உரையாடலிலே வெளிப்படுத்தி, பிறகு நாங்கள் அரசின் சார்பிலே விடுத்த ஆணையின் படி அந்த ஒக்கூரில் மாசாத்தியார் எழுதிய கவிதை ஒன்று, அனைவரும் பார்க்கத் தக்க இடத்தில் எழுதி வைக்கப்பட்டது.

அந்த அளவிலாயினும் தமிழகத்திலே பெரும் புலவர்கள், அகநானூறு பாடியவர்கள், புறநானூறு பாடியவர்கள், சங்க இலக்கியங்களை எழுதியவர்கள், இளங்கோவடிகளைப் போன்றவர்கள், திருவள்ளுவர் கம்பரைப் போன்றவர்கள், இத்தகையோருக்கெல்லாம் நினைவுச் சின்னங்களை, நினைவாலயங்களை எழுப்பிட வேண்டும்.

கம்பர் விழாவில் கம்பனுடைய சிறப்பியல்புகள், கம்பன் வழங்கிய தமிழ்க் காவியத்தினுடைய அழகு, இவைகளைப் பற்றிப் பேசுவது, தமிழ் மொழியை வளர்ப்பதற்கு மேலும் மேலும் பயன் பட வேண்டும் என்பது, என்னுடைய ஆசையாகும்.

கம்பன் உருவாக்கிய பாத்திரப் படைப்புக்கள், கம்ப ராமாயணத்துக்கென்று உருவாக்கிய பாத்திரப் படைப்புக்களே தவிர, வால்மீகி உருவாக்கிய பாத்திரப் படைப்புக்களுக்கும், கம்பன் உருவாக்கிய பாத்திரப் படைப்புக்களுக்கும் வேறுபாடு அல்ல, முரண்பாடுகளே கூட உண்டு.

இராமாயணத்துக்கு முதல் நூல் வால்மீகியினுடைய நூல்தான் என்று கொண்டால், வால்மீகி கண்ட பாத்திரங்கள்தான் உண்மையான பாத்திரங்கள் ஆக இருந்திட முடியும். அதைத் தொடர்ந்து மொழி பெயர்த்து எழுதப் பட்ட நூல்கள், அல்லது வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட நூல்கள், இவைகளிலே அமைக்கப்பட்ட பாத்திரப்படைப்புகள், அவரவர்களுடைய எழுத்து ஆற்றலுக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப, காலத்துக்கேற்ப உள்ளத்துக்கு ஏற்ப மாற்றப்பட்டு இருக்கிறதென்பதைக் கம்ப ராமாயண ஆதரவாளர்களானாலும், எதிர்ப்பாளர்களென்று கருதப்படுபவர்களானாலும், மறுத்திட மாட்டார்கள் என்பதை நான் நன்ருக உணருகின்றேன்.

கம்ப ராமாயணத்தை ஆதரித்துக் கம்பனுடைய அழகுத் தமிழைப் புகழ்ந்து போற்றிக் கம்பன் உருவாக்கிய பாத்திரங்களின் சிறப்பியல்புகளையெல்லாம் அணு அணுவாக எடுத்துச் சொல்லுகின்ற புலவர் பெருமக்கள் தமிழகத்தில் ஏராளமாக இருக்கிருர்கள். அவர்களிலே ஒரு சிலர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு ஒன்று, கம்பன் கவியமுதம் என்கின்ற பெயரால் வெளியிடப்பட்டிருக்கின்றது. அதிலே இங்கே எதிரிலே அமர்ந்திருக்கின்ற திரு. நயினர் முகம்மது அவர்களுடைய கட்டுரையும் அடங்கியிருக்கின்றது. சா. கணேசன் அவர்களுடைய கட்டுரையும் இருக்கிறது. அதை நான் வழியிலே படித்துக் கொண்டு வந்தேன்.

கம்ப ராமாயணத்தில் கம்பன் கண்ட நாடு எப்படி இருந்தது என்கின்ற வினு எழுகிற நேரத்தில், கம்பன் எப்படி அந்த நாடு இருந்திருக்க வேண்டு

மென்று கருதினனே, அது அந்த நாடா? என்ற கேள்விக்கு நாம் சென்றால், ஜி. கே. சுந்தரம் பேசுகிறபோது அயோத்தி நகர், அப்படித்தான் இருந்தது என்று இங்கே வாதிட்டார். இங்கே பேசப் படுகிற எந்தக் கருத்தானாலும், ஒரு வரை வெல்வதற்காக இன்னொருவர் பேசுகிற கருத்து என்று யாரும் கருதிக் கொள்ளக்கூடாது. கம்ப ராமாயணம் விமர்சனங்களுக்கு இடம் தருகின்ற ஒரு விரிவான தமிழ்ப் பனுவல்.

அந்த வகையிலே பலபேர் பலவகைக் கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும், அது கம்பனைப் பற்றிய திறனாய்வே அல்லாமல், கம்பனை இகழ்வதற்காக எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக் களென்று, யாரும் எண்ணிக் கொள்ள வேண்டாமென்று முதலிலேயே அணை போட்டுக் கொள்கின்றேன்:

ஜி. கே. சுந்தரம் அவர்கள் பேசுகிற போது சக்திக்கேற்பத் தண்டனை வழங்குவது பற்றிக் குறிப்பிட்டு, பணக்காரன் ஏழை என்ற பாகுபாடில்லாமல் அயோத்தியா நகரத்திலே தசரதனுடைய பரிபாலனத்தில் தண்டனை வழங்கப்பட்டதென்று ராஜாஜி அவர்கள் குறித்துக் காட்டியதை இங்கே குறிப்பிட்டார்கள். அயோத்தி நகரம் எப்படி இருந்தது என்பதைக் கம்பனுடைய கவிநயத்தின் மூலமாகச் சிறப்பித்துக் கூறுவோரும் உண்டு. அல்லது அயோத்தி எப்படி இருக்க வேண்டும் என்று கம்பன் கருதினன் என்று அதற்கு நயம் கூறுவோரும் உண்டு. ''வண்மையில்லையோர் வறுமையின்மை யால்''. வழங்குகின்ற கொடையாளிகள் இல்லை. காரணம், வறுமையுடன் போய்க் கை நீட்டுபவர்கள் இல்லாத காரணத்தினல் வள்ளல்கள் இல்லை என்று கம்பன் குறிப்பிடுகின்றான். ''எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ ' என்று குறிப்பிடுகிறான் கம்பன். அங்கு ஏற்றத் தாழ்வற்ற சமநிலை இருக்கின்ற காரணத்தால் ''எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலால் இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ'' என்று குறிப்பிடுகிறான்.

அப்படிச் சொல்வது அவைகளெல்லாம் அங்கே இல்லை என்பதைக் குறிப்பிடுகிறதா, அப்படி இல்லாமல் இருக்க வேண்டும் என்கிற கம்பனுடைய கனவை நிரூபித்துக் காட்டுகின்றதா, என்பதை எண்ணிப் பார்த்திட நாம் மறந்திடக்கூடாது. ''இராமாயண காலத்தில் அந்த நாடு அப்படித்தான் இருந்தது. அங்கு இல்லாதவர்கள் இல்லை என்கிற அந்தச் சூழ்நிலையிலே தான் இருந்தது'' என்று கம்பன் சொல்வானேயானால், அல்லது கம்பன் சொல்லுகிறானென்று நாமெல்லாம் கூறுவோமேயானல், நம்முடைய கூற்றைக் கம்பன் வேறொரு இடத்திலே மறுக்கிறான். எந்த இடத்திலே என்றால், இராமனுக்கு மகுடாபிடேகம் சூட்டுவதற்காக நாள் நேரம் குறிப்பிடப்பட்டபோது, எப்படியும் இராமனுடைய பட்டாபிடேகத்தை மாற்றிப் பரதனுக்குப் பட்டாபிடேகம் நடத்த வேண்டுமென்று கூனி கங்கணம் கட்டிக் கொண்ட பிறகு, கூனி கைகேயியைச் சந்தித்துக் கலகமூட்டுகிற நேரத்தில், கைகேயியின் மனத்தை மாற்றுகிற வகையில் சொல்கிறாள், ''பரதனுக்கு இல்லாமல் இராமனுக்கு முடிசூட்டப் பட்டு விடுமேயானல், பிறகு உனக்கு இங்கே எந்தச் செல்வாக்கும் இல்லாமல் போய்விடும். உன்னைச் சீந்துவார் யாரும் இருக்க மாட்டார்கள். என்ன நிலைமை ஏற்படுமென்றால்.....

''தூண்டும் இன்னலும் வறுமையும்
தொடர்தரத், துயரால்
ஈண்டு வந்துனை இரப்பவர்க்கு,
இருநிதி அவனை
வேண்டி ஈதியோ? வெள்குதியோ?
விம்மல் நோயால்
மாண்டு போதியோ? மறுத்தியோ?
எங்ஙனம் வாழ்தி?''

வறுமையினல் துன்பப்பட்டு உன்னிடத்திலே வந்து கையேந்துகின்றார்களே, அவர்களுக்கு நீ எதுவும் தரக்கூட முடியாத சூழ்நிலையை அடைந்து விடுவாய்

என்று, கைகேயிக்குக் கூனி சொல்லுகின்ற அந்த நிலைமைகளைக் கவனிக்கிற நேரத்தில், இரந்து கையேந்துகிறவர்கள், அயோத்தியில் இருக்கிற காரணத்தினாலே தானே, கைகேயியைப் பார்த்துக் கூனி அதைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஆகவே கம்பன், இராமாயணக் காலத்து நாடு இப்படித்தான் இருக்கிறது என்று சொல்லவில்லை. நாடு இப்படி இருக்க வேண்டுமென்று கற்பனை செய்கிறான். ஆக, ''இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ'' என்ற இந்தக் கற்பனை, இந்தக் கனவு-இன்றைக்குத் தோன்றியது அல்ல; சோஷலிஸ முழக்கமல்ல. இது கி.பி. 886 அல்லது 887-ம் ஆண்டிலேயே, கம்பனே இந்த முழக்கத்தைத் தொடங்கியிருக்கிறான்.

அதற்குமுன் வள்ளுவன் தொடங்கிய இந்த முழக்கத்தைக் கம்பன் விரிவுபடுத்தித் தமிழகத்திலே முழங்கியிருக்கின்றான். இப்படித்தான் நாடு இருக்க வேண்டும் என்று கருதினான் கம்பன். ஆகவே இப்படித்தான் இருந்தது என்று சொல்லி நம்மை நாம் ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. அப்படி இல்லை என்பதைக் கூனி கைகேயிக்குச் சொல்லுகிறாள். நமக்குச் சொல்லவில்லை. கூனி நமக்குச் சொன்னால் நாம் சந்தேகப்படலாம். கூனி சொல்கிறாள் என்றால், கம்பன்தான் சொல்லுகிறான்.

ஒரு இலக்கியத்திலே காவியத்திலே வருகின்ற பாத்திரங்கள் பேசுகின்றார்களென்றால் அந்தப் பாத்திரங்களைப் படைத்தவர்கள்தான் பேசுகின்றார்கள். அவர்கள் வாயிலாகப் பேசுகின்றார்கள். அதை நாம் மறந்துவிடக் கூடாது. இருக்கின்ற சூழ்நிலையை எடுத்துச் சொல்லிப் பேசுகின்றார்கள். அவர்கள் பேசுகின்ற கொடிய வார்த்தைகளுக்ெல்லாம் பாத்திரத்தைப் படைத்த எழுத்தாளர்கள் சொந்தக்காரர்கள் அல்ல என்றாலும், இருக்கிற சூழ்நிலைகளைச் சில நேரங்களிலே பாத்திரங்களின் வாயிலாக ஏற்றி, நிலைவிளக்கம் தருவது எழுத்தாளர்களது கடமை. அந்த வகையிலே கவிச் சக்கரவர்த்தி கம்பன், நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதனையும், நாடு எப்படி இருக்கிறது என்பதனையும், தன்னுடைய காவியத்தின் மூலமாக உலகத்துக்கு எடுத்துக் காட்டியிருக்கின்றான்.

திரு. சா. கணேசன் அவர்கள் கம்பனுடைய இராமாயணம் முதலிலே கி.பி. 886 இல் அரங்கேறியது என்பதை எடுத்துச் சொன்னார். அடுத்து கி.பி. 887 இல் திருவரங்கத்தில் நாதமுனி என்கின்ற பெரிய வைணவ ஆச்சாரியார் தலைமையில் கம்ப ராமாயணம் அரங்கேறி, ஒவ்வொரு செய்யுளையும் கம்பன் விரித்துரைக்கின்ற நிகழ்ச்சியினைக் கேட்க, ஆயிரக்கணக்கான மக்கள் திரளுவார்கள் என்கின்ற குறிப்புக்களையும் நாம் காண்கின்றோம்.

திவ்வியப் பிரபந்தத்திலே கம்ப ராமாயணத்தைச் சேர்க்க வேண்டும் என்று நாதமுனி என்கின்ற— அந்த அரங்கேற்றத்திற்குத் தலைமை வகித்த அந்தப் பரமாச்சாரியார் சிந்தித்தார் என்றும்—ஒரேயொரு காரணத்திற்காக அதை அவர் சேர்க்க முடியாமல் மறுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதென்றும், நான் ''கம்பன் கவிஅமுதம்'' என்று இந்த நூலிலேதான், காலையிலே கண்டேன்.

கம்பன் பாடுகின்றான். தன்னை ஆதரித்து வளர்த்துச் சீராட்டிய சடையப்ப வள்ளலைக் கடைசி வரையிலே மறக்காமல் காவியத்திலே பல இடங்களில் புகழ்கின்றான். அந்தப் புகழின் சிகரமாக—

''அரியணை அநுமன் தாங்க,
அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன் வெண்குடை கவிக்க,
இருவரும் கவரி வீச,
விரைசெறி கமலத் தாள்சேர்
வெண்ணெய்மன் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி''

என்று பாடுகின்றான். மகுடாபிடேகத்திற்கான மகுடத்தை வசிட்டர் யாரிடத்திலே வாங்கி இராமனுடைய தலையிலே சூட்டுகின்றார் என்றால், சடையப்ப வள்ளலுடைய மூதாதையர்களிடத்திலே வாங்கி அதைச் சூட்டினார் என்று பாடியிருக்கின்றார்.

இராமன் இருந்த அயோத்தி எங்கே? சடையப்ப வள்ளலுடைய மூதாதையர் இருந்த தமிழகம் எங்கே? இரண்டையும் இணைக்கின்றான் கம்பன். இணைக்கின்ற நேரத்தில்தான் சடையப்ப வள்ளலுடைய வள்ளல் தன்மைக்குக் காட்ட வேண்டிய நன்றியையும் காட்டுகின்றான். நன்றி காட்ட வேண்டும் என்கின்ற அந்த உணர்வு கம்பனுடைய உள்ளத்திலே எவ்வளவு திண்மையாக ஏறியிருந்தது என்பதை நான் பிறகு விளக்குகின்றேன்.

நாதமுனி என்கின்ற வைணவ ஆச்சாரியார் கம்பனிடத்திலே கேட்கிறார். சடையப்ப வள்ளல் என்கிற மனிதனை நீ இந்த ராமாயணத்திலே புகழ்ந்திருக்கிறாய். ஆகவே நர புகழ்ச்சி, நரஸ்துதி, மனிதனைப் புகழ்வது, இதிலே இடம் பெறக்கூடாது; இது முழுக்க முழுக்கக் கடவுளை, தெய்வத்தை, தேவர்களைப் புகழக்கூடிய காவியம்; இதிலே சடையப்ப வள்ளல் என்கின்ற மனிதனைப் புகழ்கிற வரிகள் இருக்கின்ற காரணத்தால், அவைகளை எல்லாம் நீக்கிவிட்டால், திவ்வியப் பிரபந்தத்திலே ஒன்றாக இதையும் சேர்க்கலாம் என்று நாதமுனி கம்பனிடத்திலே சொல்ல, கம்பன் அதை முழுமையாக மறுத்துவிட்டான். முடியாது, இது அதிலே சேர்ந்தாலும் சேரட்டும், சேராமல் போனாலும் போகட்டும், நான் நன்றி காட்டிய தன்மை இந்தக் காவியத்திலே இருந்து எடுபடக்கூடாது. சடையப்ப வள்ளலை, அவருடைய மூதாதையரைப் பற்றி நான் பாடியது இதிலே இருந்தே தீர வேண்டும் என்று கம்பன் பிடிவாதம் காட்டிய காரணத்தால், நல்ல வேளையாக அது பிரபந்தத்தில் ஏறாமல் போயிற்று. இல்லையேல் பிரபந்தத்தில் அது ஏறி இருக்கும். ஆனால் அந்த வாதம் சரியானதா? கம்பராமாயணத்தைப் பிரபந்தத்திலே ஏற்றுவதற்கு நீ மனிதனைப் பாடிய பாட்டு இடைஞ்சலாக இருக்கிறது என்று கம்பனுக்குச் சுட்டிக் காட்டப்பட்டதே, அந்தவாதம் சரியா என்றால் இல்லை.

எப்படி? அதே கம்ப ராமாயணத்தில் விபீடணன் புகழப்படுகிறான். எப்படிப் புகழப்படுகின்றான். விபீடணன் என்ன தான் இராவணனை எதிர்த்துக்கொண்டு இராமனுடைய அணியிலே வந்து சேர்ந்துவிட்டாலும்கூட, அவன் அசுர குலம்தான். அப்படி சேர்ந்த காரணத்தால் அவன் அசுரனல்ல, மானிடனாக ஆகிவிட்டான் என்று ஒரு இடத்திலே கம்பன் குறிப்பிடுகின்றான். தேவர், அடுத்து மானிடர், மூன்றாவதுதான் அசுரர்.

''ஆறுகொள் சடிலத் தானும்,
அயனும்என் றிவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்ற தன்றே''

என்று, கம்பன் வேறு ஓர் இடத்தில் ''சிவன் பிரமன் முதலிய தேவர்களையெல்லாம்கூட, மனித இனம் வென்றுவிட்டது, அதனால் உயர்ந்து சிறந்துவிட்டது'' என்று பாடியிருக்கின்றான். இத்தகைய சிறப்புமிக்க மனித குலத்தைச் சேர்ந்தவனைப் பாடக் கூடாதாம். அசுரனாகிய விபீடணனைப் பற்றிப் பாடிய பாடல் பல இருக்கும் போது, அது பிரபந்தத்திலே சேரலாம், ஆனால் சடையப்ப வள்ளல் என்ற ஒரு மனிதனைப்பற்றிப் பாடிய பாட்டு, அதிலே இருப்பதால் அது பிரபந்தத்

திலே சேரக்கூடாதாம். ஆகக் கம்ப ராமாயணத்திற்கு எப்படிப்பட்ட எதிர்ப்பு, 887-ஆம் ஆண்டு கிளம்பியது என்பதை நீங்கள் மனத்திலே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொல்லுகின்றேன்.

தேவர், மானிடர், அசுரர்-தேவர், அசுரர் என்ற இந்த இரண்டிற்கும் இடையே மானிடர், இந்த மானிடரைப் புகழ்ந்து பாடியது கம்ப ராமாயணத்திலே இருப்பதால் அது இடம் பெறக்கூடாது என்று எடுத்து வைத்த வாதம் சரியானதா? இல்லை, அதற்குச் சரியான பதில் நாம் அளிப்பது அசுரன் மானிடன் ஆனுல் என்று அசுரக் குலத்தில் பிறந்த விபீடணனைப் பாராட்டு கின்ற-திருந்திய ஒருவனைப் பாராட்டு கின்ற நூலாகக் கம்ப ராமாயணம் விளங்கலாமாம். ஆனுல் முதலிலேயே தவறு செய்யாமல், தொடக்கத்திலே இருந்து வள்ளல் தன்மையால் வாரி வாரி வழங்கிப் புகழ்பெற்ற சடையப்பவள்ளலைப் பாராட்டக் கூடாதாம். இது கம்பனுக்கு நாம் தருகின்ற தாக்குதல் என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. கம்பனுடைய காலத்திற்கு நாம் தருகின்ற தாக்குதல்.

அந்தக் காலம் கி.பி. 887 உடன் முடிந்து விட்டதா? இன்னும் நீண்டு கொண்டே இருக்கிறதா? அதை உங்களுடைய சிந்தனைக்கே விட்டு விடுகின்றேன்.

நம்முடைய ஜி. கே. சுந்தரம் இன்னென்றையும் சொன்னுர்கள். நான் இங்கே பிரச்னைகள் எதுவும் வரக் கூடாது என்கின்ற முடிவோடுதான் நிகழ்ச்சிக்கு ஒத்துக்கொண்ட நேரத்திலும்-வந்த பிறகும்-இருந்தேன். ஆனுல் அவர் பேசும்போது, இராமன் மறைந்திருந்து வாலியைக் கொன்றது தவறல்லவா என்று சிலர் கேட்கிருர்கள். அதற்கு ராஜாஜி சொல்கிற பதில் 'இராமன் மானிட அவதாரம் எடுத்து விட்டான். மானிடன் தவறு செய்வான். ஆகவே அந்தத் தவறுகளைப் பெரிதாகக் கொள்ளக்கூடாது' என்பதாகும். ஒரு கடவுள் கஷ்டப்பட்டு மனித அவதாரம் எடுப்பதே மனிதர்களைத் திருத்துவதற்காகத் தானே தவிர, இதைப்போல நடந்து கொண்டால் தவறல்ல என்று சொல்வதற்காக அல்ல.

ஆக வாலிவதைப் படலத்தைப் பொறுத்த வரையில் யாருமே இராமனுடைய போக்கை ஒத்துக் கொண்டவர்கள் அல்ல. இவைகள் எல்லாம் பாத்திரங்கள் என்ற உணர்வோடுதான் நாம் பார்க்க வேண்டுமேயல்லாமல், வேறு கற்பனை செய்து கொண்டு பார்ப்பது முறையல்ல. நல்லதல்ல. அந்தப் பாத்திரப் படைப்பில் வாலி வதைப் படலத்தில் இராமன் மறைந்திருந்து தாக்கியது குற்றம் என்பதை நாளுே மற்றவர்களோ, சொல்வதைவிட, இராமனே சொல்லுகின்ருன். எங்கே? வாலி வதைப்படலத்திலா? அல்ல. இராவணன் மாண்டுவிட்ட பிறகு சொல்கின்ருன். கம்ப ராமாயணம் படித்தவர்கள்-என்ன கருணுநிதி புதிய கதை விடுகின்ருன். அப்படிச் சொன்னதாகத் தெரியவில்லையே என்று கேட்கக்கூடும். நண்பர்களே, போரிலே இராவணன் மாண்டு கிடக்கின்ருன், மாண்டு கிடக்கின்ற இராவணனை அவனுடைய இளவல் விபீடணனுேடு வந்து இராமன் பார்க்கின்ருன். பார்க்கும்போது இராவணனுடைய முதுகில் ஒரு தழும்பு இருக்கிறது. அப்போது இராமன் சொல்லுகின்ருன், அடடா, முதுகிலே தழும்பு ஏற்றவனையா நான் கொன்றேன்? முதுகிலே காயம்பட்டவனை, தழும்பு பட்டவனைக் கொல்வது வீரனுக்கு அழகல்ல, ஆகவே முதுகிலே தழும்பு கொண்டவனையா, நான் கொன்றேன் என்று வருத்தப்படுகிருன்.

''மாண்டொழிந்து உலகில் நிற்கும்
வயங்கிசை முயங்க மாட்டாது,
ஊண்தொழில் உகந்து தெவ்வர்
முறுவல்என் புகழை உண்ணப்
பூண்தொழில் உடைய மார்பா!
போர்ப்புறங் கொடுத்தோர்ப் போன்ற
ஆண்தொழி லோனிற் பெற்ற
வெற்றியும் அவத்தம் என்ருன்.''

அப்பொழுது விபீடணன் சொல்லு கின்றான். விபீடணனைக் கம்பன் சொல்ல வைக்கின்றான். என்ன சொல்கின்றான்? "அது புறமுதுகு காட்டியதால் ஏற் பட்ட தழும்பல்ல இராமா, ஏற்கெனவே ஒருமுறை என்னுடைய அண்ணன் இரா வணன், ஒரு யானையோடு போரிட்ட போது அந்த யானையினுடைய தந்தங் கள் அவனுடைய மார்பிலே புகுந்து முதுகுக்குமேலே வெளிப்பட்டுவிட்டன. அதனால் ஏற்பட்ட தழும்புதான் அது"

"நாடுள தனையும் ஓடி
நண்ணலார்க் காண்கி லாமற்
பீடுள குன்றம் போலும்
பெருந்திசை எல்லை யானைக்
கோடுள தனையும் புக்குக்
கொடும்புறத் தழுந்து புண்ணின்
பாடுளது அன்றித் தெவ்வர்
படைக்கலம் பட்டு, என் செய்யும்?"

"அப்பணை அனைத்தும் மார்புக்கு
அணிஎனக் கிடந்த; வீரக்
கைப்பணை முழங்க மேனாள்
அமரிடைக் கிடைத்த காலன்
துப்பணை வயிர வாளி
விசையிலும், காலின் தோன்றல்
வெப்பணை குத்தி னாலும்,
வெரிநிடைப் போய அன்றே"

என்று, இராவணனுடைய வீரத்தை வெளிப்படுத்துகின்றான். இவ்வாறு கம்பன் சொல்லுகின்றான். ஆகவே இராமனே பயப்படுகின்றான். முதுகிலே தழும்பேற்ற ஒருவனைக் கொன்று விட் டோமே, பழி வந்து சேருமே என்று. அவ்வளவு வீரத்திற்கு இலக்கணம் வகுக்கிற இராமன், மறைந்திருந்து வாலியைக் கொன்றது பற்றி எவ்வளவு நாள் மனச்சங்கடப்பட்டிருப்பான் என் பதைக் கம்பருக்காக வாதாடுகின்றவர் கள், இராமனுக்காக வாதாடுகின்றவர் கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என் பதற்காகத்தான், இதைச் சொல்லுகி றேன்.

நான் இதிலும் இராமன் சார்பாகத் தான் வாதாடுகின்றேன். ஏனென்றால் அவனுக்கு அவ்வளவு கஷ்டம் ஏற்படு கிறது-முதுகிலே தழும்பேற்றவனைக் கொன்றுவிட்டோமே, நம்முடைய வீரம் நிலை குலைந்து விட்டதே பாழாகி விட்டதே என்று. அதே இராமன் வாலியை மறைந்திருந்து கொன்றோமே என்ற குற்றத்திற்காக எவ்வளவு வருந்தி இருப்பான் என்பதையும் எண் ணிப் பார்க்கத்தான் வேண்டும்.

பாத்திரங்களைப் பாத்திரங்களாகப் பார்க்க வேண்டும். ஏற்பட்டு விட்ட கஷ்டமே-இந்த நூலிலேகூட நான் ஒரு கட்டுரையைப் பார்த்தேன். காவியம் எழுதுகின்ற புலவர்களை விட்டு விட்டு, அந்தப் பாத்திரங்களுக்கு அதிக மரி யாதைகளைக் கொடுக்கத் தொடங்கி விடுகிறோம். "மனோன்மணியம்" நூலை சுந்தரம் பிள்ளை எழுதினார். அவரை நாம் நினைவுபடுத்திக் கொண்டிருக் கிறோம். அதிலே வருகின்ற சீவகன், புருடோத்தமன், மனோன்மணி, இவர் களை எல்லாம் வழிபடுகின்ற தெய்வங் களாக நாம் ஆக்கிக் கொள்ளவில்லை. ஆனால் கம்பனைப் பொறுத்த வரையில் அவனுடைய பாத்திரங்களுக்கு, அதிக மதிப்பு அளிக்கின்ற நிலையும், அந்தக் காவியத்தை உருவாக்கிய கம்பனை மறந்து விடுகின்ற சூழ்நிலையும், நாட் டிலே ஏற்பட்டது. அதை மாற்றுகின்ற புதிய புரட்சியை 35 ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய சா. கணேசன், காரைக்குடியிலே ஆரம்பித்து, காவியம் இயற்றியவன்தான் நாயகன், அவன் தான் புகழ்தலுக்கும், போற்றுதலுக் கும், பாராட்டுதலுக்கும் உரியவன் என்கின்ற முறையில், கம்பர் விழாக் கண்டார்கள். ஆகவே பாத்திரங் களுக்குத் தருகின்ற சிறப்புவேறு இடங் களிலே இருக்கட்டும், கம்பனுக்குத் தான் சிறப்பு என்று எடுத்துக் காட்டி, நிலைநாட்டி வருகின்ற இந்த விழாவைப் பாராட்டி, வாழ்த்துகின்றேன்.

# தியானமே தேவை

'சன்மார்க்கச் சான்ருேர்'
திரு. நா. மகாலிங்கம், B. Sc., F.I.E.

வாழையடி வாழையாக ஞானிகளையும் பெரியோர்களையும் பெற்று வரும் பெருமையுடையது பாரத நாடு. பாரத நாட்டின் அமைப்பும் செழிப்பும் அந்நாட்டு மக்களுக்கு இயல்பாகவே மன அமைதியினையும் சமய உணர்வினையும் தரக் கூடியது. இதனுலேயே ஆற்றல் உள்ள நாடுகள், அறிவில் சிறந்த நாடுகள், வளம் குலுங்கும் நாடுகள் என்று பல நாடுகள் உலகில் விளங்குவதைப் பார்க்கும்போது, நம் பாரத நாட்டைப் 'பாருக்குள் நல்ல நாடு பாரத நாடு' என்று பாரதியார் பாடியிருக்கின்ருர்.

கருணையே வடிவாகி, இரக்கமே உயிராகி, நம் வள்ளற் பெருமான் தெய்விகப் பெரியார்களின் திலகமாக விளங்கி, பாரதத்தில் நல்ல வாழ்வை மேலும் பெருக்கிய சிறப்புடையவராவார். இறைநிலை அனுபவம் பெற்ற எல்லாப் பெரியோர்களும் அவ்வனுபவத்தை விளக்குவதென்பது அருமை. அவ்விளக்கத்தையும் அமுதம் போன்ற இனிய பாடல்கள் மூலம் கூறுவது என்பது மிக அருமையாகும். ஆனுல் நம் பெருமானே 'தேனைவிட' இனிப்பான தெளிந்த திருப்பாடல்களை எழுதியுள்ளார்கள். மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தை வள்ளலார் எப்படித் தோய்ந்து படித்து ஞானம் பெற்ருரோ, அதே நிலையில் வள்ளலாரின் அருட் பாடல்களையும் நாம் 'ஊன் கலந்து உயிர் கலந்து' உணரும் ஆற்றலைப் பெற வேண்டும். வள்ளலாரின் பாடல்கள் முழுவதும் ஞானமும் பக்தியும் உருக்கமும் இழைந்த அற்புதப் பாடல்களாகும்.

உலகத்தில் வாழ்வதற்கென்றே நாம் பிறந்திருக்கின்ருேம். பிறந்த மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும். எப்படி வளப்படுத்திக் கொள்வது என்ற வினுவுக்கு அவரவர்கள் தங்களுக்கேற்ற வழியினைக் காட்டுவார்கள். நீர்வளம் இருந்தால் ஒரு நாடு நிலவளம் பெற முடியும். அந் நீர் வளத்தை உண்டு பண்ணுகின்ற மழையும் கடலின் உதவியில்லாமல் ஏற்படாது. நில வளத்தால் பயிர் விளைச்சல் ஏற்படும். பயிர்களால் பலனும் பணமும் ஏற்படும். அவ் வகையில் நிதி படைத்தவர்களைத் துதி செய்கிறவர்கள் பலர் நிறைந்துவிடுவார்கள். போற்றுபவர் பெருகவே அவர்களை ஆராயும் அறிவும், அறிவினுல் கிடைக்கும் தெளிவும் உண்டாகிறது. அக வாழ்க்கையில் இவ்வாறு ஏற்படுவது போல, புற வாழ்க்கையிலும் உறவினர்களும், செல்வமும், அணிவகைகளும், உணவு வகைகளும், கொடை உள்ளமும், ஈகையினுல் ஏற்படும் இரக்க உணர்வும் பெருகுகின்றன. அகமும் புறமும் இப்படிச் செழிப்பாக வளர்ச்சி பெற்று ஒருவன் அரசனுனுல், அவனுக்கு யானை குதிரை தேர் முதலிய படைகள் அவனுடைய செல்வாக்கைப் பெருக்குகின்றன. இவ்வளவு வளங்களையும் ஒருவன் பெறுவது என்ருல் அவன் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஓர் அருமையான விடையும் கிடைக்கிறது. பெரிய உலகத்தைப் படைத்து, சிறிய மனிதனுகிய தன்னையும் படைத்து, உலக வாழ்வை மகிழ்ச்சியோடு நடத்தி வைப்பது இறைவனுடைய திருவருள் என்பதை நாம் நன்கு உணர வேண்டும். திருவருளின் பெருமையையும், தன்னுடைய சிறுமையையும் நினைந்து நினைந்து உருகுவதுதான் தியானம் என்பதாகும். தியானமே உலக வாழ்வைச் சிறப்புடையதாக்கும் என்ற அழகான கருத்தை வள்ளலார் பின்வருமாறு கூறுவதைப் படித்துத் தியான உணர்வு பெறுவோமாக.

நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன் உண்டு பலனும் உண்டு
நிதி உண்டு துதி உண்டு மதி உண்டு கதி கொண்ட
நெறி உண்டு நிலையும் உண்டு


ஊர்உண்டு பேர்உண்டு மணி உண்டு பணி உண்டு
உடைஉண்டு கொடையும் உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம் உறும்
உளம் உண்டு வளமும் உண்டு

தேர்உண்டு கரி உண்டு பரி உண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும் உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியான முண் டாயில் அரசே

தார்உண்ட சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

—திருவருட்பா, தெய்வமணிமாலை

---



சேதுபதி மண்டபத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட பெருமக்கள்

# மூவகை அடியவர்

## முன்னுரை

ஆழ்வார்களுள் ஏனைய எல்லோருக்கும் காலத்தால் பிற்றோன்றியவர், திருமங்கையாழ்வார். அவர் திருக்கோவலூர்க்கு எழுந்தருளி, அங்குள்ள பெருமானைத் தொழுது 'மஞ்சாடு வரை' எனத் தொடங்கும் திருப்பதிகம் அருளிச் செய்துள்ளார். அதன்கண்,

''தாங்கரும்போர் மாலிபடப் பறவை யூர்ந்து
 தராதலத்தோர்குறைமுடித்ததன்மையானை
ஆங்கரும்பிக் கண்ணீர்சோர்ந் தன்பு கூரும்
 அடியவர்க்கட் காரமுதம் ஆனான் தன்னைக்,
கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக்
 குழாவரிவண் டிசைபாடும் பாடல் கேட்டுத்,
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
 திருக்கோவலூர் அதனுட் கண்டேன்
 நானே''

என வருவது, ஒரு சிறந்த பாசுரம். இதன் கண் திருமங்கையாழ்வார், தமக்கு முன்னே விளங்கியவர்களும், திருக்கோவலூரில் ஒருவரை ஒருவர் சந்தித்து மகிழ்ந்தவர்களும் ஆகிய முதலாழ்வார்கள் மூவரையும் நினைவு கூர்ந்து, அவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் முறையில், பல குறிப்புக்கள் பொதிந்து விளங்கும்படி, இப்பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார் என்று கூறுவர் பெரியோர்!

## மணவாள மாமுனிகள்

இப் பாசுரத்தில் ''ஆங்கு அரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்புகூரும் அடியவர்கட்கு ஆரமுதம் ஆனான்'' என வரும் பகுதி மிகவும் சிறப்புடையதாகும். 'ஆசார்ய இதயம்' என்னும் சிறந்த வைணவப் பெருநூலில், மணவாள மாமுனிகள் என்னும் வைணவப் பேராசிரியர், இவ்வரியின் பொருளை அழகுற விளக்கியுள்ளார். அவரது கருத்தின்படி இவ்வரியை ''அடியவர் — அன்புகூரும் அடியவர் — ஆங்கு அரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும் அடியவர்'' என்று மூன்று வகையாகப் பகுத்துக் கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் பகுத்துக் கொண்டால், இம் மூன்று தொடர்களும், முறையே பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் என்னும் முதலாழ்வார்கள் மூவரையும் குறிக்கும் என்பது, மணவாள மாமுனிகளின் அரிய இனிய விளக்கம்.

## பேயாழ்வார்

(1) அதன்படி, 'அடியவர்' என்பது பேயாழ்வாரைக் குறிக்கும். 'இன்றே கழல் கண்டேன்'—'பொன் முடியான் அடி இணைக்கே பூரித்து என் நெஞ்சே புரி'—'முயன்று தொழு நெஞ்சே'!'தண்ணலங்கல் மாலையான் தாள்'—'வாழும் வகையறிந்தேன் எங்கள் பெருமான் அடி சேரப் பெற்று' என்று, பல இடங்களிலும் திருமாலின் திருவடியையே சிக்கெனப் பற்றியவர் பேயாழ்வார். அடியையே பற்றி நின்றவராதலின், பேயாழ்வார் 'அடியவர்' எனப் புகழப் பெற்றார்.

## பூதத்தாழ்வார்

(2) இனி, ''அன்பு கூரும் அடியவர்'' என்பது பூதத்தாழ்வாரைக் குறிக்கும். 'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக' என்று தொடங்கிப் பாசுரம் பணித்தருளியவர் பூதத்தாழ்வார். 'விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே! என்றன் அளவன்றால் யான் உடைய அன்பு' என்று, தொடக்கத்திற் போல முடிவிலும் கூட, அன்பை வியந்து விதந்து பேசி மகிழ்ந்தவர் இவர். ஆதலின், பூதத்தாழ்வாரை 'அன்பு கூரும் அடியவர்' என்றல் பொருந்தும்.

## பொய்கையாழ்வார்

(3) இதன்மேல், 'அரும்பிக் கண்ணீர் சோரும் அடியவர்' எனப் பாராட்டப்பெற்றிருப்பவர் பொய்கை யாழ்வார் ஆவர். ''பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி அழுதேன்' என்று தாமே கூறியுள்ள

படி, இறைவனைப் பணியப் பெறுமல் பழுதே பகல் பல போயினமை குறித்து அழுது அழுது வருந்தியவராகலின், பொய்கை ஆழ்வாரை அரும்பிக் கண்ணீர் சோரும் அடியவராகக் கொள்ளுதல் பொருந்தும்.

## முடிவுரை

இங்ஙனம் திருமங்கையாழ்வார், தமது திருக்கோவலூர்ப் பாசுரத்தில், அத்தலத்தில், தமக்கு முற்பட்டு வாழ்ந்து தம்முட் சந்தித்து மகிழ்ந்த முதலாழ்வார்கள் மூவரையும் பற்றி, நினைந்து வியந்து புகழ்ந்து போற்றியதாக அமைந்துள்ள குறிப்புக்கள், நாம் அறிந்து சுவைத்தற்கு உரியனவாகும். இவ்வரிய இனிய குறிப்புக்களைத் தம் நுண் மாண் நுழைபுலனுற் கண்டுணர்ந்து, திறம் படப் பொருத்தி விளக்கிக் காட்டியருளிய மணவாள மாமுனிகளின் புலமையருள் நல மாட்சிமைக்கு எல்லையே யில்லை.

—ஆசிரியர்



இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் சேதுபதி மண்டபத்தினைத் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் திறந்து வைத்தல் (11—2—74).

# ஓங்காரம்

''உய்யும்நெறி காட்டுவித்திட்டு
ஓங்காரத்து உட்பொருளை
ஐயன்எனக்கு அருளியவாறு
ஆர்பெறுவார் அச்சோவே''

—மணிவாசகர்.

எல்லாப் பொருள்களுக்கும், எல்லா உயிர்களுக்கும், முதலாய் நிற்கும் எல்லாம் வல்ல இறைவனை, வழிபடும் முறைகளைக் கண்டுணர்ந்த நம் பண்டைப் பெரு முன்னோர்கள், இறைவனை வழிபடுவதற்குரிய மந்திரங்களுள் ஒன்ருகவும், தலைசிறந்த தாகவும், ஓங்காரம் என்பதனைக் கண்டறிந் தனர். எல்லா எழுத்தின் ஓசைகட்கும் முதலாய் இயல்பாகத் தோன்றி ஓவாது ஒலி செய்து கொண்டிருக்கும் 'ஓ' என்னும் ஒலியே ஓங்காரம் எனப்படும். இவ்வி யற்கை முதலோசை வடமொழியிற் 'ப்ரண வம்' என்று வழங்கப்படுகின்றது. 'ப்ரண' என்னும் சொல் 'பழைய' என்னும் பொருளைத் தரும். எனவே 'ஓ' என்னும் ஓசை, ஏனை எல்லா ஓசைகட்கும் முற்பட் டதாய் இயற்கையே தோன்றி இயங்கும் பழைமையுடையதாதல் பற்றி, ஓங்காரம் 'பிரணவம்' எனப் பெயர் பெற்றது.

பிரணவம் எனப்படும் ஓங்கார ஒலியைப் பிரித்துக் காண முற்படின், அஃது அ+உ+ம் என்னும் மூன்று ஒலிகளாய்ப் பிரியும். இவற்றுள் அகார ஒலி எல்லாச் செயற்கை ஒலிகட்கும் முதற் பிரிந்து படைத்தற் ருெழிலைப் புரியும்; உகார ஒலி அதன் பின்னர்த் தோன்றிச் சிறிது நேரம் நிற்ப தாகலின், அது படைக்கப்பட்ட பொருள் களைத் தத்தம் கால எல்லையளவு நிலைநிற்கச் செய்தலாகிய காத்தற்ருெழிலைப் புரியும்; மகார ஒலி உதடுகள் இரண்டும் சேர்ந்து முடிவதாகலின், அஃது அங்ஙனம் நிலை பெற்ற பொருள்களை அழிந்து போகச் செய்யும். இவ்வாறு படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் நிகழ்த்த வல்லதாகத் திகழ்தல் பற்றியே, ஓங்காரம் மிக்க சிறப்புடைய பெரு மந்தி ரம் என மதிக்கப் பெறுகின்றது. ஓம் என்னும் பிரணவத்துடன் கூடிய வழியே, எல்லா மந்திரங்களும் ஆற்றலுடையன வாகும். இல்லையேல், அவைகள் தத்தம் ஆற்றலை இழந்து நிற்கும் என்பது, மந்திர நூல் வல்லார் கருத்து.

''ஓம்எனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே உருவரும்
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓம்எனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே''

—திருமூலர்.

என்றெல்லாம், சான்ருேர்கள் இதனைப் பல வாறு புகழ்ந்து போற்றி வருகின்றனர். ஓங்காரமே, இவ்வுலகத்தின் தோற்றத்திற் கும் ஒடுக்கத்திற்கும் மூல காரணமாக அமைகின்றது என நமது வேதாகமங்கள் விளக்கி உரைக்கின்றன. ஓசையானது, தான் இயங்கும் முறையாலும், இயக்கப் படும் முறையாலும், அணுக்களைக் கூட்டுத லும், கூட்டி நிலைப்பித்தலும், கூட்டிய வற்றைப் பிரித்தலும் செய்யவல்லதாதலை, இஞ்ஞான்றை இயற்கைப் பொருள்நூலார் ஆராய்ந்து விளக்கிக் காட்டுகின்றனர். ஆதலின் இவ் ஓங்கார ஒலி உலகங்களையும் நம் உடம்புகளையும் தோற்றுவித்தும் நிலைப் பித்தும் அழிப்பித்தும் இயக்கி வருகின்றது என நமது ஞானிகள் நவின்றிருத்தல், இஞ் ஞான்றை அறிவியல் ஆராய்ச்சிகளுக்குப் பொருந்துவதாகவே உள்ளது.

அண்டம் (Macrocosm), பிண்டம் (Microcosm), என்னும் இரண்டன் இயல்பும் ஒரு தன்மையனவே என்பது, ஞானிகள் கண்ட உண்மை. அண்டங்களையெல்லாம் இயக்குவிக்கும் ஓங்கார ஒலியே, பிண்டம் எனப்படும் நமது உடலையும் இயக்கி வரு கின்றது. நமது உடம்பின் அகத்துள்ள சிறந்த உறுப்புக்கள் அனைத்தும், ஓங்கார வடிவினவாகவே அமைந்துள்ளன. நமது உடம்பின் வளர்ச்சிக்கும் நிலைபெற்றிற் கும் மிகமிகஇன்றியமையாத கருவியாகிய நெஞ்சப்பை (Heart)யின் வடிவமானது, தாமரை முகை அல்லது சங்கு போன்று, ஓங்கார வடிவமாய் அமைந்திருக்கின்றது. நெஞ்சப்பை மட்டுமேயன்றி, நமது அறிவு விளக்கத்திற்கு நிலைக்களனுய் விளங்கும் மூளையும், நாம் உண்ட உணவை ஏற்று உடம்பிற்கு வேண்டும் சாரத்தை அதனி


னின்று பிரித்துத் தரும் உணவுப் பையும், உணவுப் பையினின்று பிரித்துக் கழிக்கப் படுவனவற்றை வெளிப்படுத்தும் மலக் குடலும், சிறு நீர்ப் பையும், ஓங்கார வடிவமாகவே அமைந்துள்ளன. கருப்பையினுள் வளரும் கருவும், முதுமை நிலையில் உடலில் ஏற்படும் கூனும், ஓங்கார வடிவமாகவே உள்ளன. ஒலிகளைக் கேட்பதற்குரிய நமது காதுகளும், ஓங்கார வடிவிலேயே அமைந்திருக்கின்றன.

நமது உடலின் முழு அமைப்பே ஓங்கார வடிவமாக அமைந்திருப்பதை ஞானிகள் தம் அனுபூதி உணர்வால் கண்டறிந்து உணர்த்தியுள்ளனர். யானையின் முகம், நல்ல பாம்பின் படம், மயிலின் தோகை, சங்கின் அமைப்பு முதலிய பல இயற்கைப் பொருள்களும் கூட, ஓங்கார வடிவம் பெற்றுத் திகழ்தலைக் காண்கின்றோம். அதனாலேயே விநாயகப் பெருமான் யானை முகம் உடையவராகவும், முருகப் பெருமான் மயில் ஊர்தி உடையவராகவும் போற்றப்படுகின்றார். சிவ பெருமான் பாம்பை அணிந்திருப்பதாகவும், திருமால் பாம்பணையில் பள்ளி கொண்டிருப்பதாகவும், சமய நூல்கள் சாற்றுகின்றன. ஓங்கார வடிவம் பெற்றுத் திகழ்தலினாலேயே சங்கானது, நம் மனித வாழ்வில் பிறப்பு முதலிருந்து இறப்பு வரையில் பல வகைகளில் தொடர்புடையதாய்ப் பயன் படுத்தப் பெற்று வருகிறது.

ஓங்காரத்தின் பிரிவெழுத்துக்கள் ஆகிய அகாரம் உகாரம் மகாரம் என்னும் மூன்றில், முதல் நின்ற அகாரம் இருக்கு வேத முதல் மந்திரம் ஆகிய 'அக்நிமீளே' என்பதன் முதலிலும், இடை உகாரம் எசுர் வேதத்தின் இடையிலுள்ள ''யோநிஸ் சமுத்திரோ பந்து'' என்பதன் நடுவிலும், கடைநின்ற மகாரம் சாமவேதத்தின் இறுதியிலுள்ள ''சமாநம்வரம்'' என்பதன் ஈற்றிலும் நின்று, வேதங்களெல்லாம் ஓம் என்னும் மொழியின் பொருளேயாம் என்பதனை அறிவிக்கின்றன என அறிஞர்கள் கூறுவர். இங்ஙனமே தமிழ் மறைகளாகிய சைவத் திருமுறைகள் பன்னிரண்டும்கூட ஓங்காரத்தின் உட்பொருளாதல், யாவரும் இனிதறிந்தது. சைவத் திருமுறைகள் 'தோடுடைய செவியன்' என ஓங்காரத்தில் தொடங்கி, 'நின்றதெங்கும் நிலவி உலகெலாம்' என மகரவொற்றில் முடிதலால், திருமுறைகள் பன்னிரண்டும் ஓங்காரத்தின் விரிவாதலை உணரலாம் என்று பெரியோர்கள் கூறுவர்.

ஓங்காரமானது அ+உ+ம் என்னும் முக்கூறு உடையதாக அமைந்து, எத்தனையோ பல முத்திறப் பொருள்களை உணர்த்திக் கொண்டுள்ளது. இந்திய தத்துவச் சிந்தனைகளில், ஓங்காரம் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. ஓங்கார மந்திரமானது அருளாளர்கள் அனைவராலும் பெரிதும் மதித்து மிகவும் போற்றப்படுகிறது. இந்து மதத்தினர் மட்டுமேயன்றி, இசுலாமியர், கிறித்தவர், ஆகியவர்களும்கூட, இதனைப் போற்றுவதாகத் தெரிகின்றது. ஓம்—அமீன்—ஆமென் (Aum, Amin, Amen), என்னும் சொற்களுக்கிடையில், ஒருவகை ஒப்புமையும் ஒற்றுமையும் அமைந்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

—ஆசிரியர்.



ஓங்காரமும், உடல் அமைப்பும்.



# "போகம் ஈன்ற புண்ணியன்"

## திருத்தக்க தேவர்

''போகம் ஈன்ற புண்ணியன்'' என்னும் தொடர், தமிழிலக்கியங்களைப் பயின்று வல்ல சிறந்த புலவர்கள், அறிந்துணர்ந்து போற்றி மகிழும் சிறந்த தொடர்களுள் ஒன்ருகும். இதனை அருளிச் செய்தவர், சீவகசிந்தாமணி என்னும் செந்தமிழ்ப் பெருங்காப்பியத்தை இயற்றிய திருத்தக்க தேவர் என்னும் சிறந்த பெரும் கவிஞராவர். அவர் சமண சமயத்தைச் சார்ந்த தவ நலஞ் சான்ற முனிவர் ஆயினும், சிவபெருமானைக் குறித்துப் புகழ்ந்து போற்றும் முறையில், இத் தொடரை அருளிச் செய்துள்ளார்.

## சீவகன் வரலாறு

சீவக சிந்தாமணியின் காப்பியத் தலைவன், சீவகன். சீவகனது தந்தையாகிய சச்சந்த மன்னன், கட்டியங்காரன் என்னும் நயவஞ்சக அமைச்சனல் ஏமாற்றிக் கொல்லப்பட்டு இறந்து போகின்ருன். தான் இறந்து போகும் முன்னர்ச் சச்சந்த மன்னன், தன் மனைவியாகிய விசயை என்பவளை, ஒரு மயில் ஊர்திப் பொறியில் ஏற்றி வைத்து, எங்கேனும் சென்று உயிர் தப்பிக் கொள்ளும்படி சொல்கின்ருன். அம் மயிலூர்திப் பொறி வானிற் பறந்து போந்து, அவளை ஒரு சுடுகாட்டின்கண் கொணர்ந்து சேர்த்துவிட்டு வீழ்ந்தது. முன்பே கருவுற்றிருந்த விசயை, அங்கே ஓர் அழகிய ஆண் குழந்தையைக் கருவுயிர்த்தாள். அக் குழந்தையைத் தன் களைப்புத் தீர்ந்து கைகளால் எடுத்து அணைத்தாள். அப்போது அக்குழந்தை தும்மியது. அந்நிலையில் ஒரு வன தேவதை, 'நீடினிது வாழ்க' என்னும் குறிப்பிற் 'சீவ' என வாழ்த்தியது. அதனுல் அவ்வாண் குழந்தைக்குச் சீவகன் என்றே, பின்னர்ப் பெயர் வழங்குவதாயிற்று. அத் தேவதை கூறியபடி, 'சலஞ்சலம் என்னும் சிறந்த சங்கானது முத்தினைக் கரையில் ஈன்று விட்டுப் பின் கடலுக்குள் மறைந்து சென்று விடுதல் போல', விசயை தன் குழந்தையை அங்கேயே தன்னந் தனியாக விட்டுவிட்டுச் செல்கின்ருள். அப்போது அவ்வழியாக வந்த கந்துக்கடன் என்னும் கருணைமிக்க வணிகன் ஒருவன், சீவகன் என்னும் அக் குழந்தையைக் கண்டெடுத்தான். தனது மனைவியாகிய சுநந்தை என்பவளிடம் கொடுத்தான். சுநந்தை குழந்தையை மிகுந்த அன்புடன் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தாள். அதனுற் சீவகன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, வளர்பிறைச் சந்திரனைப் போல வளர்ந்து கொண்டு வந்தான்.

## தொடர் பயின்ற இடம்

சீவகனின் இவ்விளம்பருவ வரலாற்றைக் கூறும் இடத்திலேயே, திருத்தக்க தேவர், தமது சீவக சிந்தாமணியில், 'போகம் ஈன்ற புண்ணியன்' என்னும் இத் தொடரைக் கையாண்டுள்ளார்.

மேகம் ஈன்ற மின்அனை யாள்தன் மிளிர்பைம் பூண்
ஆகம் ஈன்ற அம்முலை யின்பால் அமிர்தேந்தப்
போகம் ஈன்ற புண்ணியன்எய்த கணையேபோல்
மாகம் ஈன்ற மாமதி யன்னுன் வளர்கின்ருன்''

சிறந்த இந்தச் சீவகசிந்தாமணிச் செய்யுள், சீவகன் இளமையில் வளர்ந்த வரலாற்றைக் கூறுகின்றது. ''போகம் ஈன்ற புண்ணியன் எய்த கணையேபோல், மாமதி அன்னுன் வளர்கின்ருன்'' என்பது, இப்பாடலின் கருத்து. இதன்கண் 'மேகம் ஈன்ற மின் அனையாள்' சுநந்தை; 'போகம் ஈன்ற புண்ணியன்' சிவபெருமான்; அவன் 'எய்த கணை' திருமால் ஆகிய கண்ணபிரான்; 'மாமதி அன்னுன்' சீவகன். சீவகன்

கண்ணபிரானைப் போல மறைவாக, ஆனால் சிறப்பாக வளர்ந்து வந்தான் என்பது குறிப்பு.

## பாடற் பொருள்

''மேகத்தில் தோன்றுகின்ற மின்னற் கொடியைப் போன்ற சுநந்தை என்பவள் பாலூட்டி வளர்க்க, வானத்துச்சந்திரனைப் போன்ற சீவகன், வளர்ந்து வந்தான். கண்ணபிரான், வசுதேவருக்கும் தேவகிக்கும் மைந்தனாகப் பிறந்து, நந்தகோபன் யசோதைப்பிராட்டி என்பவர்களால், கம்சன் என்னும் கொடியவனுக்கு அஞ்சி, ஆய்ப்பாடியில் மறைவாக வளர்க்கப்பட்டான். அதுபோலவே சச்சந்தனுக்கும் விசயைக்கும் மைந்தனாகப் பிறந்த சீவகன், கந்துக்கடன் சுநந்தை என்பவர்களால், கட்டியங்காரனாகிய கொடுங்கோலனுக்கு அஞ்சி, இராசமாபுரத்தில் மறைவாக வளர்க்கப்பட்டு வந்தான்'' என்பது இப் பாடலின் திரண்ட பொருள்.

## அழகிய உவமை

சிவபெருமான், திரிபுர அசுரர்களை அழிக்கச் சென்ற போது, பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களைச் சக்கரமாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மேரு மலையை வில்லாகவும், திருமாலை அம்பாகவும் கொண்டு சென்றான் என்பது வரலாறு. திருமாலே கண்ணபிரானாக அவதரித்ததனால், கண்ணபிரான்போல் சீவகன் மறைவாக வளர்ந்தான் என்னும் கருத்தை யுணர்த்த, 'போகம் ஈன்ற புண்ணியன் எய்த கணையேபோல்' என ஆசிரியர் ஓர் அழகிய உவமையினைக் குறிப்பிட்டார்.

## சிவபெருமான்

'போகம் ஈன்ற புண்ணியன்' என்னும் தொடர், சிவபெருமானைக் குறித்து வந்தது. போகம் ஈன்றவன், புண்ணியன் என்னும் இரண்டு சிறந்த கருத்துக்களை, அஃது உள்ளடக்கிக் கொண்டுள்ளது. சக்தியும் சிவமுமாய் இயைந்து நின்று உலகுயிர்களுக்கெல்லாம் போக நுகர்ச்சியை உண்டாக்கிக் கொடுத்து அருள் புரிந்து வருதலின், சிவபெருமான் 'போகம் ஈன்றவன்' என ஆசிரியராற் போற்றப் பெற்றான். திரிபுரங்களை அழித்தும், ஆலாலம் என்னும் கொடிய நஞ்சினை அருந்தியும், எல்லா உயிர்களையும் இனிது காத்தருளிய சிறப்பினால், புண்ணியன் எனச் சிவபெருமானை ஆசிரியர் புகழ்ந்து மகிழ்ந்தார்.

## சினந்திகழ் விடையினானும் செல்வியும்

திருத்தக்க தேவர் சமணராயினும், சைவ வைணவ சமய வரலாறுகளையும், தத்துவக் கருத்துக்களையும் அறிந்து, தக்கவாறு எடுத்துக் கையாண்டருளிய சால்பாளர் என்பது, இத் தொடரை அவர் வழங்கியவாற்றால் இனிது புலனாகின்றது.

''பொனங்கொடி அமிர்த னாளும்
  பொன்நெடுங் குன்ற னானும்
அனங்கனுக் கிலக்க மாகி
  அம்புகொண் டழுத்த வில்லார்;
இனம்தமக் கெங்கும் இல்லார்
  இயைந்தனர் என்ப; முக்கட்
சினந்திகழ் விடையி னானும்
  செல்வியும் சேர்ந்த தொத்தே''

என இதற்கு முன்னரும், 'சிவபெருமானும் உமாதேவியும் ஒன்று சேர்ந்தாற் போலச் சச்சந்த மன்னனும் விசையையும் தம்முள் அன்பினால் ஒன்றித் தகவுற மணந்து கொண்டனர்' எனத் திருத்தக்கத் தேவர் பாடியிருத்தல் போல்வனவும், இங்கு நாம் அறிந்து இன்புறுதற்கு உரியன.

## முடிவுரை :

ஒரு காலத்தில், கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் ''நீற்று மேனியராயினார் மேல் உற்ற காற்றுக் கொள்ளவும் நில்லா அமணர்'' எனப்படும் நிலையில், சமண சமயம் இருந்து வந்தது. ஆனால், ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோற்றுவித்தருளிய பக்தி இயக்கத்தின் பயனாக, அத்தகைய சமயக் காழ்ப்பு நிலை அறவே மாறியது; அதனால் இனிய நல்ல சமய சமரச உணர்வு தமிழகத்தில் முகிழ்த்து வளர்வதாயிற்று. சைவம் வைணவம் சமணம் என்னும் முப்பெருஞ் சமயங்களின் சமரச நல்லுணர்வுக்கு, 'போகம் ஈன்ற புண்ணியன் எய்த கணை' என்னும் அழகிய தொடர் அமைந்த இப் பாடல், இனியதொரு நல்ல எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது எனலாம்.

—ஆசிரியர்.

# சிவபிரானின் வீரச் செயல்கள்

'திருக்குறள்வேள்'
திரு. கு. வரதராச பிள்ளை, B.A., திருச்சி

அட்டமூர்த்தமாய், நவந்தரு பேதமாய், பேதங்களைக் கடந்த அகண்டப் பொருளாய் அளக்கலாகாப் பெருமையுடையவனாய் உள்ள சிவபெருமான் எட்டு வீரச் செயல்களைச் செய்தான் என்று புராணங்கள் கூறும். புராணங்கள் எல்லாம் சிறந்த தத்துவங்களையே அடிப்படையாகக்கொண்டன என்பது திருமூலர் கருத்து. இவ்வுண்மையை இவ்வாறு முதன் முதலாகத் தெரிவித்தவர் திருமூலராவார்.

## 1. திரிபுர தகனம்

தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி ஆகிய மூன்று அசுரர்கள் செம்பு, பொன், வெள்ளி ஆகிய மூன்று கோட்டைகளில் இருந்து கொண்டு ஆகாய வீதி வழியே சென்று ஆங்காங்குத் தங்கிப் பல இடங்களை அழித்தனர் என்றும், இம்மூன்று கோட்டைகளையும் சிவபெருமான் சிரித்து அழித்தனன் என்றும் புராணம் கூறும். இவ் வரலாற்றில் ஓர் உண்மை பொதிந்து கிடக்கிறது. சிவபெருமான் அழித்தது இக் கோட்டைகளை அல்ல; அவன் அழித்தது ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களையாம். அதுவும் சீவரைப் பற்றியுள்ள மும்மலகாரியங்களை அழித்தான் என்பார் திருமூலர். ஆணவத்தின் காரியமாவன: மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பன. கன்மத்தின் காரியம் புண்ணிய பாவ வடிவமான வினையாகும். மாயையின் காரியம் தனு, கரண, புவன, போகமாம். அவையாவன : உடல் கருவி, பிரபஞ்சம், அனுபவப் பொருள் என்பன. சிவபெருமான் சீவர்களின் பொருட்டு ஆணவாதி மும்மலங்களின் காரியங்களை அழித்தான் என்பதே முப்புர தகனத்தின் உட்பொருளாகும்.

''அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே.''

மந்திரம்—343

மாணிக்கவாசகரும் இவ்வரலாற்றின் தத்துவத்தை விளக்குகிறார்.

''தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற''

—திருவாசகம்—296

மலபரிபாகம் உற்றுத் திருவருட்பேறு உண்டானதும் மும்மலத்தின் செயல்கள் ஒழிந்தன.

## 2. கால சங்காரம்

திருக்கடவூரில் இறைவன் இயமனை அழித்து மார்க்கண்டேயன் என்ற சிறுவனை அழியாது காப்பாற்றினான் என்ற வரலாறு நின்று நிலவுவதைக் காண்கிறோம். இவ்வரலாற்றில் ஒரு பேருண்மை விளக்கப்படுகிறது. மூலாதாரத்திலிருந்து கனல் வடிவாக மூண்டு எழுகின்ற மூர்த்தியைச் சிரசுக்கு மேலே நோக்கிச் சுழுமுனையில் பொருத்தித் தியானித்திருந்தால் காலனை வென்று அழியாதிருக்கலாம் என்பதே மார்க்கண்டேய புராணத்தின் தத்துவமாகும். அவ்வாறு யோகம் இருப்பின் பிராண செயம் பெற்று நீடுவாழலாம் என்பது கருத்து.

''மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே.''

—மந்திரம்-345

158592

### 3. காம தகனம்

காமனை அழித்த வரலாறும் இயமனை அழித்த வரலாறு போன்றே ஒரு தத்துவத்தை உள்ளடக்கியது. இறைவன் ஒரு சமயம் தட்சிணாமூர்த்தி கோலம் கொண்டு தவம் இருக்கும்போது தேவர்கள் தூண்டுதலின்பேரில் காமனாகிய மன்மதன் இறைவன்மேல் மலர் அம்பை எய்து அவன் தவத்தைக் கலைத்தான் என்றும், இறைவன் சினந்து கண்ணை விழித்ததும் மன்மதன் அழிந்தான் என்றும் புராணம் கூறும். அதன் உண்மையான கருத்து என்னவெனில், சீவர்கள் உலக இன்பத்தில் அதிகமாக ஈடுபட்டு அழியாதிருக்க இறைவன் மன்மதனது செயலாகிய விந்து நீக்கத்தை அழித்து அவர்கள் உய்தி பெறுமாறு செய்தான் என்பதேயாகும்.

''இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்தி இலிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழித் தங்கண்
அருந்தவ யோகம் கொறுக்கை இருந்ததே.''

—திருமந்திரம்-346.

### 4. கஜாசுரவதம்

பிறப்பிலேயே யானையாகவே பிறந்த அசுரன் பிரமனை நோக்கித் தவம் செய்து சிவபெருமானைத் தவிரப் பிறர் எவராலும் அழியாத வரத்தைப் பெற்றான். ஆயினும், அவன் தேவர்களைத் துரத்திச் சென்ற பொழுது அவர்கள் காசியில் சிவபெருமானிடம் புக, அவர்களைக் காக்க முற்பட்ட சிவபெருமானை அவன் எதிர்க்க, அவர் யானை வடிவமான அவனை அழித்து அத்தோலைப் போர்த்தருளினார் என்பதும் அட்ட வீரச் செயலுள் ஒன்றாகும். ஆனால் இறைவன் யானை போன்ற காரிருளைக் கிழித்து வேள்வியினின்றும் எழுந்த சோதி போல் விளங்கினான் என்பது கருத்து.

''முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியா னவது அறிகிலர்''

என்பது திருமந்திரம்.

### 5. அந்தகாசுர சங்காரம்

அந்தகாசுர சங்காரமும் இக் கருத்துப் பற்றியதே. இவ்வசுரன் தான் பெற்ற வரத்தின் பலத்தால் உலகத்தில் வாழ்கின்ற உயிர்களுக்கு எல்லாம் துன்பம் செய்தான். தேவர்கள் சிவபெருமானிடம் இது குறித்துத் தெரிவிக்க அவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கிச் சூலாயுதத்தினால் அவ்வசுரனை அழித்தருளினார் என்பர். அறியாமையாகிய அந்தகாசுரனை ஞானமாகிய சூலங் கொண்டு அழித்தருளினான் என்பதே உண்மைப் பொருளாம்.

''கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர்வேண்டக்
குருத்துயர் சூலங்கைக்கொண்டுகொன்றானே''

—திருமந்திரம்-339

'கருத்துறை அந்தகன்' என்பதால் அந்தகன் புறத்தே இல்லை என்பதும், அவன், கருத்திலே இருந்து அறியாமையைச் செய்கிறான் என்பதும் புலனாகின்றன. 'வரத்தின் உலகத்து உயிர்கள்' என்பதால் பக்குவப்பட்ட சீவர்கள் என்பதும், 'குருத்துயர் சூலம்' என்பதால் சுடர் விடுகின்ற ஞானம் என்பதும் புலனாகத்தானே செய்கிறது!

### 6. தக்கன் வேள்வி தகர்த்தது

தக்கன் என்பான், தானே முதல் என்று கருதிச் சிவபெருமானை மதியாது ஒரு பெரிய வேள்வியைச் செய்தான். திருமால் உள்ளிட்ட எல்லாத் தேவர்களையும் அழைத்தான். சிவபெருமானை அழைக்கவில்லை. மேலும் வேள்விக்கு வந்த சிவசக்தியாகிய தாட்சாயணியையும் அவமதித்தான். சிவபெருமான் வெகுண்டான். அதன் விளைவு தக்கன் யாகம் அழிந்தது ;தேவர்கள் சிதறி ஓடினர்; தக்கன் பிழைத்து ஓடியும் சிரம் அறுபட்டுச் செருக்கு ஒழிந்தான். பிறகு பிரமன் வேண்டுகோளுக்கு இரங்கி, ஆட்டுத் தலையைப் பொருத்தி வாழும்படி அருளினான், என்பது புராணம். பிரமன் உள்ளிட்ட எல்லாத் தேவரும் சிவனது கோபத்துக்கு ஆளாகித் தண்டனை பெற்றனர்.

''தந்தை வெகுண்டான் தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறைகெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினஞ்செய்த போதே.''

—திருமந்திரம்-353

சீவர்கள் மூலாக்கினியைத் தூண்டிச் செய்யும் வேள்வியில் சிவனை நினைந்து செய்யின், விந்து செயம் பெற்று ஒளி பெறுவர். அவ்வாறு செய்யாவிடில் தேவ காரியமாகிய விந்து செயம் பெறாது கெடுவர் என்பதே அதன் பொருளாம். இதுவே அக்கினி காரியம் என்று ஆசிரியர் சிறப்பித்துக் கூறுவார்.

## 7. பிரமன் சிரம் கொய்தது

பிரமன் தருக்கியபோது அவனது சிரத்தைக் கொய்து அம்மண்டை ஓட்டில் (பிரம கபாலத்தில்) திருமாலின் உதிர்த்தை ஏற்றுக் கொண்டான் என்ற புராண வரலாறு முன்னே சொன்ன கருத்தையே வற்புறுத்துவதாகும். மனித உடலிலுள்ள ஆறு ஆதாரங்களில் ஆறு கடவுளர் இருந்து கொண்டு ஆறு வகையான அனுபவங்களை ஊட்டிக்கொண்டு இருக்கிறார்கள். பிரமன் மண் தலமாகிய சுவாதிட்டானத்திலிருந்து உற்பத்தியின் நிமித்தம் விந்து நீக்கம் செய்து கொண்டிருக்கிறான். திருமால் கடற்பிரதேசமாகிய மணிபூரகத் தானத்திலிருந்து உலக போகத்தில் சீவர்களுக்குக் கவர்ச்சியை உண்டாக்கிக் கொண்டு இருக்கிறார். சீவர்கள் விந்து செயம் பெற்று ஒளி விளங்கித் திகழ வேண்டிப் பிரமனது சேட்டையைக் கெடுத்துத் திருமாலினது கவர்ச்சியினின்றும் சிவபெருமான் விடுவித்தான் என்பது கருத்தாம்.

''பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற
அங்கச் சுதனை உதிரங்கொண் டானே.''

என்ற வரிகளில் அயன் தலையை அறுத்து அச்சுதனின் (திருமால்) உதிரத்தைக் கொண்ட வரலாற்றை ஆசிரியர் கூறுகிறார்.

## 8. சலந்தராசுர வதம்

சலந்தராசுரன் என்னும் அசுரன் அழிவில்லாத பலம் பெற்றிருந்தான். அதனால் சிவனையே அழித்துவிட வேண்டும் என்று அவன் புறப்பட்டு வந்தான் என்றும், அப்பொழுது பெருமான் கால் விரலால் கீறிய சக்கரத்தைப் பெயர்த்து எடுக்கச் சொன்னான் என்றும், அச் சக்கரமே ஆழிப் படையாக இருந்து அவ்வசுரனை அழித்தது என்றும் புராணம் கூறும். இவ்வரலாறு ஒரு யோக வகையினை உணர்த்தும் தத்துவமாக அமைந்துள்ளது. உடம்பில் சிறப்பாக இரண்டு வாயுக்கள் உள்ளன. அவை பிராணன், அபானன் என்பன. பிராணன் மேல் நோக்கம் கொண்டதாயும், அபானன் கீழ் நோக்கம் கொண்டதாயும் இருப்பன. நீரை முகமாக உடையது, அபானன். இதனை அங்குலியோக சாதனையால் மேல்முகமாக்கிப் பிராணனோடு சேர்ப்பின் சிரசின் மேல் விளங்கும் சகஸ்ரதளம் விரிந்து வட்டமாகப் பிரகாசிக்கும் என்பதாம்.

''எங்கும் கலந்துமென் உள்ளத் தெழுகின்ற
அங்க முதல்வன் அருமறை யோதிபாற்
பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித் தாழிசெய் தானே.''

—திருமந்திரம்-342

இம்முறையில் திருவதிகை, திருக்கடவூர், திருக்குறுக்கை, வழுவூர், திருக்கோவலூர், திருப்பறியலூர், திருக்கண்டியூர், திருவிற்குடி ஆகிய திருத்தலங்களில், மேற்சொன்ன முறையே எட்டு வீரச் செயல்கள் நிகழ்ந்ததாக அமைத்து உண்மைப் பொருளைப் பக்குவப்பட்டோர் உணர்ந்து கொள்ளுமாறு, நம் முன்னோர் காட்டிய அருமைப் பாட்டை அறிந்து மகிழ வேண்டும்.

# மாயையின் இலக்கணம்

திரு. தி. சு. கோவிந்தசாமி பிள்ளை,
செயலாளர், சைவசித்தாந்த சபை, மதுரை.

சிவஞான சித்தியார், மெய்கண்டதேவ நாயனரின் நேர் மாணவரான அருணந்தி சிவாசாரியரால் அருளிச் செய்யப்பெற்றது என்பது அறிவோம். இது பரபக்கம், சுபக்கம் என இரு பிரிவாக முறையே 301, 328 செய்யுட்களாலாயது. இதைச் சிவஞான போதத்திற்குச் செய்யுளால் இயற்றிய உரை என்றுங் கூறுவர். சிவ ஞான முனிவர் சிவஞான சித்தியாரை ''ஆகமார்த்தங்களுக்கெல்லாம் உரை ஆணி'' என்பர். தமிழிலே உயர்ந்த நூல்கள் ஆறு என்று கண்டவிடத்து அதனுள்ளும் சிவஞான சித்தியார் ஒன்று என உமாபதி சிவம் கூறுகிருர். அந்நூல்களாவன :

''வள்ளுவர்நூ லன்பர்மொழி வாசகந்தொல்
காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளிய
சீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம்''

என்பதாகும்.

தருமை ஆதீன முதல்வரான குருஞான சம்பந்தர் ''பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்'' என்கிருர். தாயுமானவர் ''பாதி விருத்தத்தால் இப்பார் விருத்த மாக வுண்மை சாதித்தார் பொன்னடியைச் சாரும்நாள் எந்நாளோ'' என்பர். ''அருளினு லறியாமை யறிவகற்றி'' என்ற பாட்டின் பாதி விருத்தத்தில் கூறும் செய்திகளை ''ஐந்து வகை யாகின்ற'' என்ற பாடலில் அடக்கிக் கூறித் தமக்கு உபதேசிக்கப்பட்டது, ''வீறு சிவஞான சித்தி நெறியே'' எனத் தாயுமானர் கூறுகிருர்.

''சித்திக்கு மேல் நூலில்லை சிவத்துக்கு மேல் தெய்வமில்லை'' என்பது பழமொழி. இந்நூலில் உள்ள செய்யுட்கள் அழகிய செவ்விய சுருங்கிய சொற்களாற் ருெடுக்கப்பட்டுள்ளன. விழுமிய ஓசையுடையன. ஆயுந்தோறும் ஆயுந்தோறும் மேன்மேற் கிளைக்கும் நுண்பொருட் பெருக்கத்தையுடையன. எடுத்துக்காட்டாக மாயையின் இலக்கணத்தைக் கூறும் ஒரு பாடலில், ஏனைய சமயிகள் கூறும் பொருந்தாமையை எடுத்துக் காட்ட ஒவ்வொரு சொல்லால் மறுத்து அச்சொல்லாலேயே அதன் இலக்கணத்தை வகுத்துக் காட்டும் அழகு நோக்கற் பாலது.

1. கணிகவாதிகள் ஒன்றன் சார்பில் ஒன்று தோன்று மென்பர். எனவே ஒன்று தோன்றுங்கால் அது தோன்றுதற்கு முன்னுள்ளது கெடும் என்பது அவர் கொள்கை. அதனை மறுத்தற்கு 'நித்தமாய்' என்ருர்.

2. உலகாயதர் உலகத்தோற்றத்திற்கு பூதங்களே காரணமென்பர். அவரால் கொள்ளப்படுவன நான்கு பூதங்களேயாம். அவை உருவமாதலின் அதனை மறுத்தற்கு ''அருவாய்'' என்ருர்.

3. சாங்கியர் உலகத்திற்குக் காரணம் முக்குணமாகிய பிரகிருதி என்பர். அதனை மறுத்தற்கு ''ஏகநிலையதாய்'' என்ருர்.

4. மாத்துமிகர் மாயையைச் சூனியமென்பர். அதனை மறுத்தற்கு ''உலகத்திற் கோர் வித்துமாய்'' என்ருர்.

5. சிவாத்துவிதர் உலகத்திற்குக் காரணம் சிற்சத்தி என்பர். அதனை மறுத்தற்கு ''அசித்தமாய்'' என்ருர்.

6. வைசேடிகர் முதலியோர் உலகத்திற்குக் காரணம் பரமாணுக்கள் என்பர். அணுக்கள் என்றதனுலேயே வியாபகமில்லாத தென்பது பெறப்படும். அதனை மறுத்தற்கு ''எங்கும் வியாபியாய்'' என்ருர்.

7. பாற்கரியர் உலகத்திற்குக் காரணம் பிரமம் என்பர். அதனை மறுத்தற்கு ''விமலனுக்கோர் சத்தியாய்'' என்றூர்.

8. மாயையின் சொரூபம் புலனுதிகள் என்பதுணர்த்துதற்கு 'புவன போகந் தநு கரணம் உயிர்க்காய்'' என்றூர்.

9. மாயாவாதிகள் (தற்காலம் வேதாந்தம் என்ற பெயரால் ஏகான்ம வாதமே பிரசாரம் செய்வோர்) உலகத்திற்குக் காரணமாகிய மாயை அநிர்வசனம் என்பர். அதனை மறுத்தற்கு ''வைத்ததோர் மலமாய்'' என்றூர்.

10. சைவருள் ஒரு சாரார் மாயை ஆணவ மலம்போல் மயக்கமே செய்யுமென்பர். அதனை மறுத்தற்கு ''மயக்கமுஞ் செய்யுமன்றே'' என்றூர்.

இனி இப்பாடலை நோக்குவோம் :

நித்தமாய் அருவாய் ஏக
நிலையதா யுலகத் திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும்
வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந்
தநுகர ணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் 'மாயை'
மயக்கமுஞ் செய்யும் அன்றே.

—சுபக்கம், 143.

1. உலகிற்கு முதற்காரணம் எனப்படும் அசுத்த மாயையினிலக்கணம் யாது எனில் உற்பத்தி இல்லாததால் நித்தமாகியும்,

2. கண்ணுக்குத் தோற்றுமையால் அருவமாகியும்,

3. அழிதலில்லாமையால் ஒன்றுகியும் (ஏகநிலை),

4. உலகம் உண்டாதற்கு ஒரு காரணமாதலால் வித்தாகியும்,

5. அறிவில்லாததால் சடமாகியும் (அசித்து),

6. எவ்விடத்தும் ஆன்மாக்களுக்குத் தநுகரண புவன போகங்களைக் கொடுத்தலால் வியாபகமாகியும்,

7. முதல்வனின் வியாபகத்துள் அடங்குதலால் அவனுக்கு ஓர் வைப்புச் சத்தியாகியும்,

8, 9. புவனமும், போகமும், தநுவும், கரணமுமாக உயிர்களின் பொருட்டு விரிதலால் ஒரு மலமாகியும்,

10. விபரீத உணர்வினைச் செய்தலால் மயக்கஞ் செய்வதாகியும் உள்ள இலக்கணங்களை யுடையதாம் என்பது பெறப்பட்டது.

''மயக்கமே'' என்ற பிரிநிலை ஏகாரம் இருப்பின், தநுகரணுதிகளைச் செய்யாதென விலக்கும். ''மயக்கமும்'' என்றவும்மை, மாயை தநுகரணுதிகளால் அறிவை விளக்குவித்து மயக்கமுஞ் செய்யும் என்பது குறித்தது. மயக்கம் என்பது விபரீத உணர்வு. விபரீத உணர்வைச் செய்தல் மாயைக்குத் தன்னியல்பன்று என்பதும், ஏகதேச அறிவினைச் செய்தல் என்பதும் உணரற் பாற்று.

ஒன்றுயுள்ளது அழியாது என்ற இதனுல் பலவாகிய ஆன்மாக்கள் (உயிர்கள்) அழியுமோ எனின், பலவாயும் சித்தாயும் (அறிவுடைய பொருள்களாயும்) இருத்தலால் அழியாதென்க.

ஆகவே பலவாயும் சடமாயும் உள்ளன அழியுமென்றும், ஒன்றுயும் சடமாயும் உள்ளது (மலம்) அழியாதென்றும், சித்து (அறிவுடைப் பொருள்) ஒன்றுயினும் (பதி), பலவாயினும் (உயிர்கள்) அழியாதென்றும் அறிக! இதனுல் இறை, உயிர், தளை ஆகிய முப்பொருளும் என்றும் உள்ளன என்பதும் பெறப்பட்டது. வாழ்க அருணந்தி சிவம்!

# திருநாவுக்கரசரின் திருத்தொண்டு

[கவிஞர் திரு. மனசை. ப. கீரன், B.A., B.T.]

தென்னாற்காடு மாவட்டத்தில், திருவதிகை என்னும் சிவத்தலத்திற்கு அருகில் உள்ளதும், திருநாவுக்கரசர் பெருமான் தோன்றியருளியதும் ஆகிய, சிவம்பெருக்கும் திருஆமூர் என்னும் திருவாமூர்த் தலத்தில், 17-4-74 அன்று, திருநாவுக்கரசர் குருபூசை விழாவினையொட்டித், தருமையாதீனத் தலைவர் திருவார்திரு. சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருவுளப்பாங்கின்படி நிகழ்ந்த கவியரங்கில், முதுபெரும்புலவர்-கவிஞரேறு-பேராசிரியர் திரு. ஏ.கே. குமரகுருபர ஆதித்தர், M.A., அவர்கள் தலைமையில் நிகழ்ந்த கவியரங்கத்தில் கலந்துகொண்டு, தாம்பரம் ''சென்னைக் கிறித்தவக் கல்லூரி''யின் பழைய மாணவரும், கவிதை இலக்கியம் முதலியனவற்றிற் பரிசுகள் பல பெற்றவரும், முன்பே பற்பல அழகிய கவிதைகளை எழுதி வெளியிட்டுப் பல பெருஞ்சான்றோர்களின் பாராட்டுதல்களைப் பெற்றிருப்பவரும், சென்னை வானொலியிற் பணியாற்றிவருபவரும் ஆகிய கவிஞர் திரு. மனசை. ப. கீரன், B.A., B.T., அவர்கள் பாடிய சிறந்த இனிய கவிதை, இங்கு வெளியிடப்பெறுகின்றது.

—ஆசிரியர்

அப்பரது கவியரங்கில் அப்பா போன்ற
அருந்தலைவர் ஆதித்தர், மற்றும் இங்கே
ஒப்பற்ற நிகழ்ச்சியினை நிறுவி என்றும்
ஓங்குபணி புரிகின்ற தருமை ஆசான்,
செப்புகவி அரங்கேற்றும் கவிஞர், நல்லோர்,
செவிகொடுக்கும் அன்பர்கள், அனைவர் சீர்த்தி
முப்போதும் சிந்தையுற வணங்கு கின்றேன்!
மூதறிஞர் தொண்டுநலம் மொழிவேன், கேண்மின்! (1)

பறக்கின்றோம்! எதற்காகப் பறப்போம், என்று
பாராமல் பறக்கின்றோம், இற்றை நாளில்!
துறக்காமல், தோயாமல், அப்பர் போலத்
துலங்கினிய கோவில்கள் அணைதல் ஆற்றோம்!
சிறக்கின்ற தலமெல்லாம் படிந்த அண்ணல்
திருநாவுக் கரசரவர் பிறந்த ஆமூர்
பிறக்கின்றோர் பேறுடையோர்! இந்நாள் இங்கே
பிணைந்துவக்க வாய்த்தமைஎன் பேறே, நல்லீர்! (2)

தன்கையே தனக்குதவி என்னும் கொள்கை,
தான்கண்ட இராட்டையினால் குறித்தார், காந்தி!
மன்னுகின்ற சிலுவையினால் உலகம் உய்க்கும்
மாண்துறவைச் சுட்டியுளார் இயேசுப் பெம்மான்!
நன்னருள விரலைந்தால் நபிகள் அந்நாள்
நாயகனார் புரந்திடுதல் நாட்டி யுள்ளார்!
முன்னியொளிர் சமுதாயத் தொண்டை அப்பர்
மொழிந்துள்ளார் உழவாரப் படையால் அன்றோ? (3)

நீறுடைய திருமேனி! கையில் என்றும்
நீண்டுயர்ந்த உழவாரப் படையே! செய்ய
கூறுடைய திருமுகத்தில் முறுவல்! நாவில்
கூறுகின்ற ஐந்தெழுத்து நமச்சி வாய!
வீறுடைய விழியிரண்டில் அருளை யார்க்கும்
விளைக்கின்ற திருநோக்கம்! கனிந்து தோய்ந்த
பேறுடைய திருநாவுக் கரசர் போலப்
பிறங்குகின்ற தொண்டர்யார் உள்ளார்? சொல்மின்! (4)

செந்தமிழை மலைமுகட்டின் விளக்காய் ஏற்றிச்
செழும்புலவர் பற்பலரும் வளர்ப்பார்; உண்மை!
வந்தபெரும் கவிஞரெலாம் நூல்கள் யாத்தே
மகிழ்ந்தமைந்தார்; உடல்சிறிதும் உழைத்த தில்லை;
அந்தமில்சீர்த் தேவாரப் பதிகம் பாடி,
அருமைமிக உழவாரத் தொண்டும் செய்தார்!
எந்தம்அரும் திருநாவுக் கரசர் என்றால்,
ஏற்றமிகும் அவர்தொண்டின் திறம்என் சொல்கேன்? (5)

நீண்டபுகழ்ப் பெருங்கவிஞர் புகழின் ஏது
நினைக்குங்கால், அவர்படைக்கும் நூல்கள் தம்மில்
யாண்டுமிலாப் புதுநடையும், கருத்தும், சொல்லும்
இலங்குவதே எனக்காண்போம், இதயம் ஈவோம்!
தாண்டகமும், குறுந்தொகையும், நேரி சையும்,
தகமுதலில் புதிதாக்கி, வாழ்விற் கொள்கை
தூண்டுகின்ற இலக்கியத்தும் தொண்டாய் அப்பர்
தோற்றுவித்தார்! புலவரிலே சான்றோர் ஆனார்! (6)

இங்கிந்நாள் பொதுவுடைமைச் சமூகந் தன்னில்
எவருக்கும் பொருளுடைமை இல்லை என்பார்!
''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்தும்
தரணியுடன் வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதியோம்'' என்று
வாய்மலர்ந்தார்! புத்துலகத் தலைவர் ஆனார்!
எங்கெவரும் பரமன்முன் சமனாய்ப் பாடி
எழுகின்ற பொதுவுடைமைத் தொண்டர் ஆனார்! (7)

சாதிமத வேற்றுமைகள் மாந்தர் தம்முள்
சாற்றுவதும் பெருங்கொடுமை; தவறே என்ற
நீதியினைத் தலைவரெலாம் முழக்கு கின்றார்!
நிகழ்காலக் கவிஞரெலாம் பாடு கின்றோம்!
தீதியன்ற ''கோத்திரமும் குலமும் கொண்டே
செய்வதென்நீர்?'' என்றந்நாள் இடித்துக் கேட்டார்!
மேதினியில் குலப்பிரிப்புச் சுவர்கள் வீழ,
வீறுகொண்ட சீர்திருத்தத் தொண்டே செய்தார்! (8)

காந்தியண்ணல் தீண்டாமை ஒழித்தற் காகக்
    கடையரெனப் பட்டோரை 'அரிசன்' என்றார்!
ஏந்தல்அப்பர் 'நாம்வணங்கும் கடவு ளாரே!'
    என்றவரைச் சிறந்தெடுத்துக் குறித்தார் அன்றோ?
தீந்தமிழில் பதின்மூன்று நூற்றாண் டின்முன்
    தீண்டாமை தீய்ந்திடவே 'இறைவன் மக்கள்—
மாந்தர்' என வழங்கவில்லை; ''கடவுள்'' என்றே
    வணங்கியுளார்; அப்பர்தொண்டின் மாட்சி என்னே! (9)

இந்நாளில் நிலைகுலைக்கும் கறுப்புச் சந்தை
    எங்கெங்கும் தலைவிரித்தே ஆடி நிற்கும்!
செந்நாவின் திருநாவுக் கரசர், ''நாட்டிற்
    செல்வங்கள் கரப்போர்க்கு நரகம்'' என்றே
அந்நாளிற் கயவர்தமைச் சாடி யுள்ளார்!
    அழகியநற் சமவுரிமைச் சமூகம் நாட்ட'
முன்னாளில் மிகமுயன்று பாடு பட்டார்!
    மூதுலகில் தொண்டவர்போல் யாரே செய்வார்! (10)

அறிவறிந்து தம்கொள்கை தவறாம் என்றே
    அறியுங்கால், மாறுவதே ஆன்றோர் ஆக்கம்!
நெறியினிலே சமண்சமயம் தழுவி வாழ்ந்து
    நிலைகுலைந்த நாவரசர் சைவம் வந்தார்!
வெறியுடனே மகேந்திரனும் சமண வேந்தன்
    மிகவதைத்தும், மன்னனவன் மனத்தை மாற்றிச்
செறிநலங்கள் உணர்த்தியதால், சைவர் ஆனார்!
    திகழ்சமயத் தொண்டவர்போல் யாரே செய்வார்? (11)

பல்லவரில் மகேந்திரனை வன்மை இன்றிப்
    பண்புயர்ந்த சைவத்தைத் தழுவச் செய்தார்!
நல்லரசன் அவன்முதலில் கல்லிற் கோவில்
    நாடெங்கும் நாட்டியதால் இன்றும் நிற்கும்!
கல்வெட்டிக் கோவில்கள் செய்யும் பாங்கிற்,
    கால்கோளைச் செய்தவனைச் சைவன் ஆக்கித்,
தொல்புகழின் கோயிலெலாம் சிறக்கப் பாடித்,
    துதித்தஅப்பர் தொண்டுகளால், தமிழம் ஓங்கும்! (12)

கடமைசெய்து, செய்விப்பார் தலைவர் ஆவார்!
    கலக்குகின்றார்; புரட்சியெனக் குழப்பு கின்றார்!
கடலுக்குள் ஆழ்ந்திடவே கல்லில் கட்டக்,
    கன்மிதப்பில் கடல்கடந்து கருணை செய்தார்!
உடலழிக்க நீற்றறையில் இட்டபோழ்தும்,
    ஊறின்றி இறையுணர்வில் திளைத்து நின்றார்!
அடரவரும் கொடுமையெலாம் தாமே தாங்கி
    அகிம்சைஅருட் புரட்சிசெய்தார்! அப்பர் வாழ்க! (13)

திருநாவுக் கரசரவர் தொண்டின் சீர்மை
    செப்புதற்கு வாய்ப்பளித்தோர், சுவைத்தோர், இந்த
திருவாரூர் அன்பர்க்கும், நன்றி யுள்ளேன்!
    சிறந்தோரே! யாவர்க்கும் வணக்கம்! நன்றி!

# "நல்லார் வணங்கப்படுவான்"

**நீலகேசி:**

''நல்லார் வணங்கப் படுவான்'' என்னும் இச் சொற்றொடர், ஒரு பாடலின் தொடக்கக் குறிப்பு ஆகும். அப்பாடல் நீலகேசி என்னும் நூலின் முதற் பாடலாக வருகின்றது. நீலகேசி என்பது தமிழில் 'ஐஞ்சிறு காப்பியங்கள்' என வழங்கப்படுவனவற்றுள் ஒன்று. ஐஞ்சிறு காப்பியங்களாவன : நீலகேசி, சூளாமணி, உதயணன் கதை, யசோதர காவியம், நாககுமார காவியம் என்பன. நீலகேசி ஒரு சமண சமய நூல். அது தமிழில் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாக விளங்கியிருந்து மறைந்துபோன குண்டலகேசி என்னும் பௌத்த சமய நூலுக்கு எதிர் நூலாக எழுந்ததென்பர்.

''நல்லார் வணங்கப் படுவான்;
பிறப்பாதி நான்கும்
இல்லான்; உயிர்கட்கு இடர்தீர்த்து
உயர்இன்பம் ஆக்கும்
சொல்லான்; தருமச் சுடரான்
எனும் தொன்மையினான்;
எல்லாம் உணர்ந்தான்! அவனே
இறையாக ஏத்தி!''

எனவரும் அருகன் துதியோடு நீலகேசி தொடங்குகின்றது. இந்நூலுக்கு 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் சமய திவாகர வாமன முனிவர் என்பார் சிறந்ததோர் உரையினைத் திறம்பட இயற்றியுள்ளார். நுண்மாண் நுழைபுலம் மிக்க அவ்வுரையாசிரியர், நீலகேசியின் முதற் பாடலாக வரும் இச்செய்யுளுக்கு விரிவானதோர் உரை எழுதியுள்ளார். அதிலும், 'நல்லார் வணங்கப்படுவான்' என்னும் தொடர் குறித்து வரைந்துள்ள சிறந்த உரைப் பகுதிகள், மிகவும் சுவை பொருந்தித் திகழ்கின்றன. 'நல்லார் வணங்கப்படுவான்' அருகனேயன்றிப் புத்தன் அல்லன் என்பதனை, அவ்வுரையாசிரியர் பெரிதும் வற்புறுத்தி எழுதிச் செல்லுகின்றார். புத்தர்பிரான் பல வகைக் குற்றங்களையுடையவர் எனவும், அக்குற்றங்கள் ஒன்றும் இல்லாதவர் தமது சமயக் கடவுளாகிய அருக தேவன் ஒருவரே எனவும், அவர் எழுதிச் செல்லுந்திறம் வியப்பை விளைவிப்பதோடு, அவர் தம் வழக்கீட்டு நெறியின் வன்மையினையும் நன்கினிது புலப்படுத்தி, ஒரு வகை மகிழ்ச்சியுணர்வினை எழுப்புகின்றது. அவருரையின் சிறந்த பகுதிகளை மட்டும் ஈண்டு அகழ்ந்தெடுத்துச் சுருங்கத் தொகுத்துக் காண்போம் :

**நீலகேசி உரைப் பகுதி:**

(1) ''இனி, நல்லார் வணங்கப்படுதல் முதலாயின சுகதன் (புத்தன்), முதலாயினார்க்கு எய்தாதாயினன்றே, அருக பரமேட்டிக்கு மங்கல மாவது? அஃதென்னை பெற்றவாறெனின், குற்றமில்லாதாரையன்றே நல்லார் வணங்குவது! இம்சையும் அசத்தியமும் ஸ்தேயமும் காமமும் திரஷ்ணையும் முதலாயின குற்றங்கள் சுகதன் முதலாயினார்க் குண்மையின், அவர் நல்லார் வணங்கப்படார் என்பது.

(2) சுகதனுக்குக் கொலை முதலாயின எங்ஙனம் உளவாகின்றன? எனில், ஆத்ம வதத்தாலும் மாமிச பட்சணத்தாலும் கொலையுண்டென்பது . . பஞ்ச அங்கமும் கூடிற் கொலையாம், அன்றெனில் ஆகாது என்று உபதேசித்தலாலும் சுகதனுக்குக் கொலையுண்டென்பது. இனி, அசத்திய கதனமும் (பொய் பேசுதலும்) சுகதனுக்கு உண்டு : புண்ணிய பாபங்கள் செய்தவன் அக்கணத்தே நசிக்கின்றானாதலால், தத் பலங்கள் பெறான் என்பதறிந்தும், இன்ன புண்ணியஞ் செய்தான் இன்ன பலன் பெறும், இன்ன பாபஞ் செய்தான் இன்ன பலன் பெறும் என்று சொல்கின்றானாதலால் . . .

(3) இனி, சுகதனுக்குக் களவும் உண்டு; குடையும் செருப்பும் முதலாயின ஒரு காலத்துத் தானம் பெற்றுப் பிறிதொரு காலத்து அவற்றை என்னுடையன என்று பற்றுமாதலால் . . .களவுண்டென்பது.

(4) இனி, சுகதனுக்குக் காம சேவையும் உண்டு. இவனுக்குத் தாரமும் புத்திரரும் உண்மை பெறப்படுதலின் என்பது.

(5) இனி, சுகதனுக்குத் திரஷ்ணேயும் (ஆசையும்) உண்டு. மாமிசம் பட்சித்தலும், தாம்பூலசேவையும், பல்லுத்துடைத்தலும், ஸ்நான பானங்களும் குடை செருப்பு முதலாயின கைக்கோடலும் ஆசை யொழியக் கூடாமையின் என்பது.

(6) இனி, இவன் காமபரவசனுமாம்; உறக்கத்தான் மயங்குதலும், பசியால் வருந்தி நாடோறும் பிட்சை யிரத்தலும் உண்மையின் என்பது.

(7) இனி, இவன் பொருள் இருந்தவாறு (தத்துவஞானம்) அறியானுமாம்; என்னே? பதார்த்தங்கள் நிரம்சமாய்க் கணத்திற் கெடும் என்று சொன்னவன் தானே, முன்பு நான் முயலாய்ப் பிறந்து தருமோபதேசம் பண்ணினேன்; இப்பொழுது புத்தன் ஆயினேன் என்று ஆகமோபதேசம் பண்ணினுன் ஆதலால். இனிக்கொலே முதலாயின இழுக்குத் தலேவரும் என்று தவிர்ந்தான் அல்லன்; உலகம் தவிர்த்தலில் தவிர்ந்தான் என்றமையானும் பெறுதும்.

(8) இனி, உயிர்கட்கு இடர் தீர்த்து உயர் இன்பம் ஆக்கும் சொல்லுடைமையும் பிறர்க்கு இல்லே; அவர்கள் உயிர்கட்கு இடர் ஆக்கும் சொல்லினர் ஆதலால். என்னேயெனின், சுகதன் புண்ணிய பாபங்களேச் செய்தார்க்கு அதன்பயனே நுகரும் தன்மை இல்லே என்பது அறிந்தும், புண்ணியம் செய்ம்மின் பாபம் ஒழிமின் என்று உபதேசித்து உயிர்களேக் கிலேசிப்பிக்கின்ருன் ஆதலாலும்; ஐந்தங்கங்களில் குறையக் கொன்ருர்க்குக் கொலேயில்லே என்றும், மாமிசம் தின்பார்க்குக் கொலேயில்லே என்றும் கொலேமேற் புரிவித்தும், காற்பொன்னிற் ருழ்ந்தது களவன்று என்று களவின்மேற் புரிவித்தும், எண்ணம் மாத்திரை வைக்கிற் காமமன்று என்று காமத்தின்மேற் புரிவித்தும், கள் என்னும் உள்ளமின்றிக் கட்குடித்தார்க்குக் குற்றமில்லே என்று மகாயானம் மந்திரயானங்கள் சொல்லிக் கட்குடிப்பித்தும், பிறன் பொய் என்று அறியாமற் சொல்லும் பொய் பொய்யன்று என்று பொய்மேற் புரிவித்தும், மற்றும் பல பிரகாரத்தாலும் சர்வ சீவன்களேயும் இகபர லோகத்துத் துன்புறுவிக்கின்ருன் ஆதலாலும்; மகௌஷத பண்டிதனுன சாதகத்துத் தான் ஒரு அரசனுக்கு மந்திரியாய்ப் பிரதிபட்சத்து அரசர்களே வஞ்சித்தும், பெண்ணேயும் பிள்ளேகளேயும் பிறர்க்குக் கொடுத்துப் பீடித்தும், பிறவாற்ருலும் உயிர்களேத் துன்புறுவிக்கின்றமையின், உயிர்கட்குஇடர் ஆக்கும் சொல்லான் என்பது பெறுதும்.

(9) இனி, எல்லாம் உணர்தலும் சுகதாதிகட்குக் கூடாதாம். சுகதன் கணந்தோறும் கெடுகின்ருனுதலால், தான் உளன் ஆகிய ஒரு கணத்திலுள்ள ஒன்றையும் அறிவதல்லது பிற அறியானும்..அன்றியும், பௌத்தரால் சுகதன் முற்றுணர்வினன் அல்லன் என்பது சொல்லவும் பட்டது..''

**முடிவுரை :**

இங்ஙனம் சமண சமய நூலாகிய நீலகேசி பௌத்தர்களேப் பழித்துரைக்குமாறு போலவே, பௌத்த சமய நூலாகிய மணிமேகலேயின்கண் சமணர்களேப் பழித்துரைக்கும் குறிப்புக்கள் உள்ளமை காணலாம். சைவ வைணவ சமயத்தினரே, சமய பௌத்த மதங்களேத் தம் சூழ்ச்சிகளால் அழித்தொழித்து விட்டார்கள் எனச் சிலர் கூறுவது உண்டு. ஒருதாய் வயிற்றில் உடன் பிறந்தோர் ஆகிய சுந்தன் உபசுந்தன் என்னும் அசுரர்கள், காமமேலீட்டால் அழகிற் சிறந்த திலோத்தமை என்பவளே அடைய விரும்பித் தம்முள் தாமேபொருது கொண்டு, இருவரும் ஒருசேர அழிந்தனர் எனப் புராணங்கள் கூறும். அம்முறையிலேயே, சமண பௌத்தர்களும் ஒருவருக்கொருவர் அழுக்காறு காரணமாகத், தம்முள் தாமே பொருது கொண்டு அழிந்தனர் எனத் தெரிகின்றது. ''சமண பௌத்த மதங்கள் தாமாகவே அழிந்தன. அவற்றைப் பிறர் அழித்தனர் என்பது, ஒரு சிலரின் கற்பனேயும் கட்டுக் கதையுமே ஆகும்'' * என்று பேரறிஞர் இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுவது, இங்கு நாம் எண்ணியுணரற்பாலது.


—ஆசிரியர்.

*" Buddhism died a natural death in India. It is an invention of the interested to say that fanatic priests fought Buddhism out of existence. The violent extermination of Buddhism in India is legendary."


—Dr. S. RADHAKRISHNAN.

"In the history of the succession of schools, it is found that the first schism in the Sangha was followed by a series of schisms leading to the formation of different sub-sects, and in the course of time ELEVEN such sub-sects arose out of the Theravada while SEVEN issued from the Mahasanghikas. Later, there appeared other sub-sects also. All these branches appeared one after another in close succession within two or three years after the Buddha's parinirvana." —2500 years of Buddhism

600 008.
158592



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில் கொடியேற்று மண்டபத் திறப்பு விழாவி
மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு மு. கண்ணப்பர் அவர்கள் உரை நிகழ்த்துதல். (30-2-74)




திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில் கொடியேற்று மண்டபத்தை
மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு மு. கண்ணப்பா அவர்கள் திறந்து வைத்தல். (30-2-74)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-600034
Printed at Tamil Arasu Press Madras-600002. Editor : N. R. Murugavell, M.A., M.O.L.